# தென்னாட்டுக் காந்தி

அருட் பதிப்பகம்



பூவை.எஸ். ஆறுமுகம்

# தென்னுட்டுக் காந்தி

பூவை எஸ். ஆறுமுகம்

அழகுப் பதிப்பகம்
காரைக்குடி.

அழகு — 32

மார்ச் — 1966

விலை ரூ. 2—00

அழகு அச்சகம், காரைக்குடி.

# பதிப்புரை.

செயற்கரிய செய்தும், சொலற்கரிய சொல்லியும் நிற காங்கிரஸ் தலைவர் அவர்கள் இந்நூலுக்கும் டை ...ாங்குகிறார்கள்.

அன்பை மதிப்பவர்கள் அவரை வாழ்த்துவார்கள்.

அறத்தை வாழ்த்துபவர்கள் அவரை மதிப்பார்கள்.

தியாகத்தை வழிபடுபவர்கள் அவரை வணங்குவார்கள்.

தேசபக்தியைப் பேணுபவர்கள் அவரை வழிபடுவார்கள்.

அவர்: மதிப்புக்குரிய முதுபெருந் தலைவர் திருமிகு: காமராஜ்.

அவர்: தமிழ்நாட்டுக் காந்தி.

என்றென்றும் நம்மிடை வாழ வல்ல ஆசிய ஜோதியாம் நேருபிரான் முன்பு தமிழகத்துக்கு வருகை புரிந்த தருணத்திலே, தமிழகத்தின் முதலமைச்சராகப் பதவிப் பொறுப்பேற்றிருந்த திரு காமராஜ் அவர்களை "தமிழ் நாட்டுக் காந்தி" என்று புகழ்ந்து போற்றினார்.

காமராஜ் அவர்களைப்பற்றிச் சொல்ல ஆயிரம் பக்கங்கள் போதாது. ஆனாலும் அவர்களைப்பற்றி ஒரு வார்த்தை சொல்லும் பேறு பெற்றுத் தன்னிறைவும் தன்னமைதியும் பெற பழகிவரும் சமுதாயம் விரிந்து

வரும் பொற்காலம் இது. இந்நிலையே, அவர்களது மகத்தான உன்னதத்துக்கு ஓர் அத்தாட்சி. அத்தகை சீரிய பாக்கியத்தில் நாங்களும் 'அணியாக' அமைந் பங்குபற்ற விழைகிறோம்.

பூக்கடைக்கு விளம்பரம் தேவையோ, தேவை யில்லையோ, தெரியவில்லை. ஏனென்றால் கால மாறிவிட்டது.

ஆனால் பூவுக்கு விளம்பரம் தேவையில்லை. பூஎனி மணமுள்ள பூ என்பதே பொருள்.

அதேபோல, 'பூவை'க்கும் விளம்பரம் தேவையில்லை 'பூவை'யில் பூ இருக்கிறது மணமும் இயல்பா குணமாக நிறைந்திருக்கிறது அல்லவா? அதுவே பூவையின் பெயருக்குக் கிடைத்திருக்கிற ஒரு விசேஷ தானே!

"உமா" இதழின் பொறுப்பாசிரியராக அன்பர் பூவை எஸ். ஆறுமுகம் பணி இயற்றிய காலை, அவர் செய்துபார்த்து, செய்து காட்டிய சோதனைகள் ஒன்றல்ல, இரண்டல்ல. அவற்றின் மகிமையை — மதிப்பை — உயர்வை இலக்கியத் துடிப்புக் கொண்ட எவரும் எக் காலத்தும் மறக்கமுடியாது. அத்தகைய மறக்கமுடியாத பணிக்கு ஒரு சிகரமாக, அவர் அவ்வப்போது எழுதிவந்த தலையங்கங்கள், விசேஷக் கட்டுரைகள் பலவற்றில் சிலவற்றைத் தொகுத்து இப்போது வெளியிட் டிருக்கிறோம். தலைப்புக் கட்டுரை மட்டும் புதிது. பாகிஸ்தானத்தின் பண்பிழந்த போக்கைக் கண்டிக்க அங்கங்கே பல இடங்கள் காத்துள்ளன. தலைவரின் பேச்சுக்கள் எதிரிகளுக்கு ஓர் எச்சரிக்கையாகவும், நமக்கு ஒரு தூண்டுதலாகவும் அமைந்துள்ளன.

இக் கட்டுரைத் தொகுப்பு நூல் உலக வியவகாரச் சூழல்களின் பின்னணியில் அமைந்துவிட்டிருப்பதுடன், தேசிய ஒருமைப் பாட்டுச் சக்தியின் வலியுறுத்தலுக்கும் ஆதாரம் தந்திருக்கிறது.

'பூவை'யின் நூல்கள் பலவற்றை இதுவரை நாங்கள் வெளியிட்டிருக்கிறோம். எங்கள் வெளியீடான **"பூவையின் கதைகள்"** என்ற நூலுக்கு **தமிழ்நாடு அரசினரின் பரிசு** கிடைத்திருக்கிறது. அவற்றிடை, இந் நூலின் தரம் தனித்து நிற்கும். இந் நூலினைத் தமிழ் ஆர்வலரும், நாட்டுப் பற்றுள்ளோரும் ஆர்வத்துடன் வரவேற்பார்கள் என்னும் உண்மையை நாங்கள் அறிவோம். ஆசிரியருக்கும் உங்களுக்கும் எங்களுடைய அன்பையும் நன்றியையும் தெரிவிக்கக் கிட்டிய இச்சிறு வாய்ப்பை நாங்கள் வாழ்த்துகின்றோம்.

**கா. முத்து,**

***உரிமையாளர், அழகுப் பதிப்பகம்.***

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1 | தமிழ் நாட்டுக் காந்தி | 5 |
| 2 | மகாத்மா வாழ்த்துவார்! | 21 |
| 3 | நேருஜியின் உலகம் சுற்றுகிறது! | 26 |
| 4 | அணு ஆயுத வல்லரசுகளுக்கு வழிகாட்டுகிறது பாரதம்! | 30 |
| 5 | பாரதநாடு பார்க்கெலாம் திலகம்! | 35 |
| 6 | காங்கிரசுக்கே ஓட்டுப் போடுங்கள்! | 41 |
| 7 | வெற்றி முரசம்! | 47 |
| 8 | அன்று காந்திஜி எச்சரித்தார்! இன்று நேருஜி எச்சரிக்கிறார்! | 55 |
| 9 | முதல் குடியரசுத் தலைவரின் கடைசிப் பேருரை | 61 |
| 10 | இரண்டாவது டாக்டர் | 66 |
| 11 | தமிழே போதனா மொழி | 71 |
| 12 | தமிழ் எங்கே? தேவநாகரி எங்கே? | 76 |
| 13 | வான் புகழ் வள்ளுவர் | 83 |
| 14 | குருதேவருக்கு அஞ்சலி | 87 |
| 15 | வாழும் தமிழே, வாழி! | 93 |
| 16 | தென்னாட்டுக் காந்தி! | 100 |

O அதிசயத்தின்
O ஒரு பேரதிசயமாக
O விளங்கும் பெயர்:
O காமராஜ்.
O ஆம்;
O சரித்திரத்தைச்
O சிருஷ்டி செய்துவிட்ட
O பெயர் இது!

# தமிழ் நாட்டுக் காந்தி

# தமிழ் நாட்டுக் காந்தி

## 1964, மே மாதம் 27-ஆம் நாள்!

**பா**ரதத்தின் இதயமாகத் திகழ்ந்த ஆசிய ஜோதி நேருஜியின் இதயம், துடிப்பை நிறுத்திக் கொண்ட துயர் மண்டிய நாள் அது!...

உலகப் பேரொளியாம் நேரு பிரான் அமரத்துவம் எய்திய புனிதம் நிரம்பிய நினைவு நாள் அது!...

உலகத்தின் பேரதிசயமாகவும் பேரதிசயத்தின் உலகமாகவும் விளங்கிய பாரதப் பிரதமர் நேருஜியின் மறைவுக்குப் பின், அவ்விடத்தை இட்டு நிரப்பத் தகுதியும் தியாகமும் பெற்ற உள்ளம் எது என்று உலக நாடுகள் அத்தனையும் இந்தியாவை நோக்கிச் சிந்தனைகளைத் திருப்பிவிட்டிருந்த சரித்திரப் பிரதானம் பெற்ற நாள் அது!....

ஆம்; அத்தகைய சரித்திர மகிமை பூண்ட அத் தினத்தை, சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு மகத்தான தினமாக—ஒரு மாண்பு மிகுந்த தினமாக ஆக்கிய பெருமை அகில இந்திய காங்கிரஸ் தலைவர் காமராஜ் அவர்களையே சார்ந்தது.

நேரு பிரானின் எதிர்பாராத மரணத்தினால் ஏற்பட்ட தாங்கவொண்ணாத அதிர்ச்சியும், ஈடு செய்யமுடியாத மாபெரும் இழப்புணர்வும் மேலிட்டு, இந்திய தேசத்தின் நாற்பத்தைந்து கோடி மக்களும் ரத்தக் கண்ணீர் சொரிந்து கொண்டிருந்த நேரத்தில், நேருஜியின்

இடத்தில் திரு லால்பகதூர் சாஸ்திரியை அமர்த்தி, தீர்க்க முடியாத பெரும் சிக்கலை காதும் காதும் வைத்த மாதிரி தீர்த்துவிட்ட மனிதாபிமானம் நிரம்பிய அச் செயல் திறனை உலக நாடுகள் பூராவுமே ஏகமனதாகப் பாராட்டின!— இப் பெருமையின் சரித்திரத்திற்கு ஒரு பொற்காலக் குறிப்பு ஈந்தவர் சரித்திர புருஷர் காமராஜ் அவர்களே ஆவார்!— நேருஜியின் நல் வாழ்த்துக்களுடன் புவனேஸ்வரம் காங்கிரஸில் அகில இந்திய காங்கிரஸ் தலைமைப் பொறுப்பை ஏற்ற காமராஜ், அதே நேருஜியின் இதயத்துக்குச் சாந்தியை நல்கி தம்முடைய கடமையைச் சஞ்சீவியாக அமைந்து செவ்வனே செய்துகாட்டி, இந்திய நாட்டின் பெருமையைக் கட்டிக் காத்துவிட்டார் அல்லவா?

காமராஜ் — லால்பகதூர் கூட்டு நாட்டுக்கு நல்ல சகுனம்! நேருஜியின் இந்தியாவுக்கு இன்றுள்ள செல்வாக்கு தனி!

மெய்தான்.

உலக நாடுகளுக்கு மத்தியில் இந்தியாவின் அந்தஸ்தையும் நிலைக்கச் செய்துவிட்ட ஓர் ஆதரிசப் பெயர் அது!

**காந்திஜி ஒருமுறை குறிப்பிட்டார் :**

தலைமையில் உள்ளவர்களின் நடத்தை ஒன்றுதான் பொதுமக்களிடம் நற்பலனை உண்டாக்கும்!''

ஆம்; முற்றிலும் உண்மை.

இப் பொன் உரைக்கு நிதர்சனமான ஓர் உரைகல் ஆனார் மதிப்புக்குகந்த காமராஜ்.

புடமிட்ட பொன் அவர்!

ஏழையாய்ப் பிறந்தார்.

ஏழைகளுடன் ஒன்றி வாழ்ந்தார்.

ஏழைகளின் வாழ்வுக்கும் வளத்துக்கும் பாடுபட்டார்.

ஏழை பங்காளன் ஆனுர்!...

அவர் பேச்சு நாட்டின் மூச்சு!

அவரே ஒரு சக்தி!...

காமராஜரின் உருவச் சிலையைத் திறந்து வைத்த தருணம் ஜவஹர்லால் அவர்கள், "காணக் கிடைக்காத அபூர்வமான தலைவர் காமராஜ்!" என்று இதயபூர்வமாகப் பாராட்டிப் புகழ்ந்தார்.

காலம் என்றென்றும் ஒலிபரப்பி அஞ்சல் செய்து கொண்டிருக்கும் அமரவாக்கு இது.

உயர் மரபும், வரலாற்றுச் சிறப்பும், தொன்மைப் பண்பும் கொண்டிலங்கும் நம் தமிழ் நாட்டின் அமைச்சர் தலைவராக காமராஜ் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை நடத்தி வந்த அந்த ஆண்டுகள் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படத் தக்கவையன்றோ!

மக்கள் தலைவரைப்பற்றி திரு சவான் குறிப்பிட்டார்: "... ஆவடிக் காங்கிரஸின் போது நான் சென்னைக்கு வந்திருந்தேன். திரு காமராஜ் அவர்களைப்பற்றி ஒரு உழவரிடம் விசாரித்தேன். அரசியலைப்பற்றி ஒன்றுமே அறியாத அவ்வுழவர் விண்ணை நோக்கிக் கைகளைக் கூப்பினுர். "ஆண்டவன் அவரை நீடூழி வாழச் செய்ய

வேண்டும்!" என்று பகவானைப் பிரார்த்தனை செய்தார். மக்கள் உள்ளங்களில் தனி இடத்தைப் பெற்றவர் காமராஜர்! .. இந்தியாவிலேயே மிக நிலையான அரசு தமிழகத்தில்தான் இருந்து வருகிறது. மக்களாட்சி முறையில் சிறப்புற ஆட்சி நடத்தும் ஒப்பற்ற தேசியத் தலைவர் காமராஜ். அவர் அறிஞர். இந்திய தேசிய ஒற்றுமைக்கு காமராஜ் அவர்களின் பணி மிக விரிந்த அளவில் கிட்டு மென்பதும் உறுதி!"

தெளிந்த தீர்க்கதரிசனப் பண்புடன்தான் சவான் அவர்கள் அன்று சொல்லியிருக்க வேண்டும்.

அண்மையில் நடந்த நிகழ்ச்சி இது.

தமது அறுபத்து மூன்றுவது பிறந்த நாள் விழாச் சுற்றுலாவின் போது, ஓரிடத்தில் காமராஜரின் கார் நின்றது. விவரம் அறிந்த ஏழைப் பெண்கள் ஓடிவந்து, என்ன தடுத்தும் கேளாமல், காமராஜரின் பாதங்களைத் தொட்டு வணங்கி ஆனந்தக் கண்ணீர் வடித்து, "எங்களுக்குப் பசிக்குச் சோறும் எங்க வீட்டுப் பிள்ளைகளுக்கு கண் திறக்கப் படிப்பும் கொடுத்து வருகிற தெய்வம் — கண்கண்ட கடவுள் நீங்கள்!" என்று வாயார, நெஞ்சாரப் புகழ்ந்த செய்தியை நாளேடுகள் என்றும் மறக்க முடியாது.

இலவசக் கல்வி முறையை இப்போது கல்லூரி நுழைவாசலிலும் நுழைத்துவிடும் பெரு முயற்சிகளை மேற்கொண்டிருக்கும் கர்ம வீரர் தலைவர் காமராஜ்!

**காலம் ஓடியது!**

வெள்ளையன் ஓடினான்.

காட்சிகள் மாறின.

அன்னை பாரததேவி சுதந்திரதேவி ஆனுள்.

அண்ணல் காந்தியடிகள் வாழ்த்திய தொண்டர் காமராஜ், விடுதலை வீரர் காமராஜ், சமுதாய நலச் சேவகர் காமராஜ், இன்று தொண்டர்களின் தொண்டராகவும், தொண்டர்களின் பண்புடைத் தலைமையாளராகவும் காட்சி தருகின்ருர். 'அமரருள் உய்க்கும் அடக்கம்' அவர் சின்னம்! தமிழ்ப் பண்பாட்டின் சீலம் நிறைந்த காவலர்!

இரத்தத்தோடு இரத்தமாக ஊறிவிட்ட தியாக நலப் பண்பு, நாட்டுப்பற்று, தன்னலமற்ற சேவை, ஆழ்ந்த மனிதாபிமானம், உலக அறிவு, பரந்த அரசியல் விவேகம், உணர்ச்சித் துடிப்பு, விரிந்த உள்ளம், சாந்தம், அறப்பண்பு, எளிமை, தூய்மை, ஈரம், அன்பு, நேசப் பரிவர்த்தனை போன்ற குணங்களுக்கு ஓருருவமாகத் திகழும் மேதை காமராஜ். 'முறை செய்து' காப்பாற்றும் அவர் 'மக்கட்கு இறை'யாகப் பரிமளிப்பதில் வியப்பென்ன இருக்க முடியும்?

## திரு காமராஜ் ஓர் ஆச்சரியக் குறி!

பதவி மோகம் விளையாடும் இப் பூவுலகிலே, பதவியைத்துறந்த ஓர் உதாரண புருஷர் அவர். 'காமராஜ் திட்டம்' வரலாற்றுச் சிறப்புக்கொண்ட சேதி!...

**1963** நவம்பர் **3**-ல் நேருஜி சொன்னுர்:

"காங்கிரஸ் அக்கிராசனர் பதவிக்குக் காமராஜ்தான் மிக மிகத் தகுதி வாய்ந்தவர். சென்னையில் அவர் செய்த நற்பணிகள்பற்றி எல்லோருக்கும் தெரியும். காங்கிரஸ்

ஸ்தாபனத்திற்கு வலுவூட்ட புதுத் திட்டத்தைக் காமராஜ் தெரிவித்து, காங்கிரசுக்கே ஓர் அதிர்ச்சி வைத்தியத்தை அளித்திருக்கிறார். காமராஜ் திட்டம் நாம் செல்ல வேண்டிய புதுப் பாதையைக் காட்டியிருக்கிறது. காங்கிரஸ்காரர் பதவியிலிருந்து விலகமுடியும்; அல்லது பழைய உளுத்துப்போன வழியிலிருந்து அவர்களை அகற்றி, புதுவழியில் திருப்பமுடியும் என்பதைக் காமராஜ் திட்ட அமுல் நிரூபித்துவிட்டது! ...''

உண்மை; ஒரு நாட்டின் தலைமைப் பீடம் என்பது ஒரு கோயிலுக்குச் சமானமாகும். அந்தத் தலைமைப் பதவியில் அமருவதற்குத் தேவைப்படுகின்ற குண நலன்கள் பலவுண்டு. நாட்டுத் தலைவனிடம் அந் நாட்டின் தலையெழுத்தையே ஒப்படைத்துவிடுகிறோம். ஆகவேதான், அத் தலைவன் நாட்டுப்பற்றே உயிர்ப்பாகக் கொண்டு, சுயநலப் பண்பைத் துறந்து, பந்தபாசம் கட்டறுத்துவிட்டு, பொது மக்களின் வளப்பமான எதிர்காலமும் சுமுகமான நல் வாழ்வுமே தன் கனவு, இலட்சியம் என்று கருதுபவனாக இருக்க வேண்டும். இவ்வகையான மனச் சாட்சிக் குறிக்கோளை ஓம்பி நடக்கும் மனிதர்கள் மேற் சொன்ன தலைமைப் பொறுப்பிற்கு வாய்ப்பது வெகு அபூர்வம்.

அந்த ஓர் அபூர்வமாக — அபூர்வத் தலைவர் காமராஜர் — தமிழகத்தின் சொத்தான காமராஜர் இன்று பாரதத்தின் பொது உடைமையாக ஆகிவிட்டார். பூதலத்தின் ரோஜாவாகிவிட்டார்!....

தமிழ் கொண்டு இமயம் வரை வென்றுவிட்டது ஒரு தமிழ் உள்ளம்!

இனி, தமிழன் என்றென்றும் தலை நிமிர்ந்து நடப்பான்!

### 1903-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15-ஆம் நாள் !

திரு குமாரசாமி—திருமதி சிவகாமி தம்பதிக்கு ஒரு புனிதமிகு நந்நாள் ஆகும். ஆம்; அன்றுதான் காமராஜ் அவதாரம் செய்தார்—ஆம்; 'அவதாரம்' செய்தார்.

இந்நாள், பாரதத் திருநாட்டினுக்கும் ஒரு பொற்புடைத் தவநாளே ஆகும்.

எண்ணிப் பார்க்கிறேம்:

1903ல் பிறந்தார்.

1919ல் காங்கிரஸில் சேர்ந்தார்.

1920ல் ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கு.

1922: சாத்தூர் வட்டக் காங்கிரஸ் மாநாட்டுக்கு வரவேற்புக் குழுச் செயலாளர்.

1923-ல் கொடிப் போராட்டத்துக்கு தொண்டர் தலைமை.

1927-ல் சென்னை மவுண்ட் ரோடில் இருந்த நீலன் துரையின் சிலையினை அகற்ற போராட்டம்.

1930-ல் உப்புச் சத்தியாக்கிரகத்தில் கைது; சிறைவாசம்.

1932-ல் சட்டமறுப்பு.

1933-ல் விருதுநகர் அஞ்சல் அகத்தில் குண்டு வீசியதாகக் குற்றச் சாட்டு; தண்டனை.

*1936*-ல் தமிழ்நாட்டு காங்கிரஸ் கமிட்டியின் செயலாளர்.

*1937*ல்-எம். எல். ஏ.

*1940*, த. நா. கா. க-வின் தலைவர்.

*1948* அதே பதவி.

*1953*-ல் தமிழ் நாட்டின் முதல் அமைச்சர். தொடர்ந்த ஆண்டுகளில் பதவியின் தொடர்ச்சி!

*1963*-ல் காமராஜ் திட்டம்-பதவித் துறப்பு-காங்கிரஸ் கட்சியின் வளர்ச்சிக்காகப் பொது நலச் சேவை-அகில இந்திய காங்கிரஸ் தலைவர்!

*1965* அ. இ. கா. தலைமைப் பணி, பொறுப்பு நீடிப்பு!

எண்ணி முடிக்கிறோம்.

தொண்டர், தலைவர் ஆன கதை, கதைபோலவே தெரிகிறது.

இன்றைய இந்திய நாட்டின் 'விதி'யாக விளங்கி வருகிறார் தன்னேரில்லாத் தலைவர் பெருமான். அவர் தலைமை, இன்றைய இந்திய நாட்டுக்கு இன்றியமையாததொரு தேவை ஆகிவிட்டது! — அவசியத் தேவை ஆகிவிட்டது! ..

**... சொத்துசுகம் நாடார்! சொந்**
**தந்தனை நாடார்!**
**பொன்னென்றும் நாடார்! பொருள்**
**நாடார்! தான் பிறந்த**

அன்னையையும் நாடார்! ஆசை
    தனை நாடார்!
நாடொன்றே நாடித்தன் நல
    மொன்றும் நாடாத
நாடாரை நாடென்றார்!...
    நாடினேன்!...
...... ஜனநாயகத்தோடு
சமதருமம் பூத்துத் தழைக்கும்
    வழிதேர்ந்தேன்!
புதிராகநின்று போயதெல்லாம்
    போயொழிய
எதிர்காலம் கண்டேன்! என்
    தலைவன் தத்துவத்தைப்
பாடினேன்! வாழ்க! பாண்டியனார்
    நந்நாட்டு
என் தலைவன் வாழ்க!...

கவிஞர் கண்ணதாசனின் 'பார்வை'யில் அற்புதம் நிகழ்ந்துவிடும்!

பூதான இயக்கத்தின் தலைவர் முன்னம் குறிப்பிட்ட மாதிரி, திருமிகு காமராஜ் அவர்களே காங்கிரஸின் இதயம்!

அமெரிக்க நாட்டின் சோஷலிஸ மேதை ஒருவர், "அரசியல் என்பது சாதுர்யமான ஒரு வித்தை," என்றார்.

ஆனால் காமராஜ் அவர்கள் எப்போதுமே வித்தை காட்டியது இல்லை; வித்தை காட்ட விழைந்ததும் இல்லை; வித்தை காட்டவேண்டிய அவசியம் கொண்டதும் கிடையாது! ஆனால், அரசியல் வித்தையாடிகளின் வித்தைகளைப் பார்க்கும் பார்வையாளராக இருப்பார்.

போலி வித்தையாடிகளின் ஊழல்களை அம்பலப்படுத்தி விடும் இரும்பு மனிதர் அவர்!...

**நாட்டின் வளர்ச்சிக்கும் வாழ்வுக்கும் சர்வபரித் தியாகம் செய்யவல்ல உள்ளங்களுக்குக் காமராஜ் ஒரு சீரிய வழிகாட்டி!**

'த்யாக வேள்வியில்' பூத்த பாரிஜாதம் காமராஜ்!

பதவிப் பித்துக்கொண்ட போலிகளுக்குக் காமராஜ் ஓர் எச்சரிக்கை!

அநீதியை அழிக்கும் நீதிதேவன் காமராஜ்!

நாட்டின் பொது அமைதிக்குப் பங்கம்விளைவிக்கும் தீய சக்திகளுக்கு காமராஜ் ஓர் அபாய அறிவிப்பு!

ஏழை எளியவர்களுக்குக் காமராஜ் கண்கண்ட ஒரு தெய்வம் — தெய்வமனிதர்!

வாய்ச்சொல் வீரர்களுக்குக் காமராஜ் ஒரு சிம்ம சொப்பனம்! உலக நாடுகளின் நல்ல மனிதர்களுக்குக் காமராஜ் ஓர் அதிசய மனிதர்!

சத்தியத்தின் தேவன் அவர்!

தன்னை அழித்துக்கொண்டு மணக்கும் சந்தனக் கட்டை.

தர்மமிகு காமராஜ் அதற்குச் சமதை!

பாரத மண்ணைத் துளியளவேனும் எதிரிகள் கைப்பற்ற இடம் கொடாத கொள்கை வீரர் அவர்!

ஆம்; பாரதத் தாயின் இனிய நற்கனவாக இன்று காமராஜ் பொலிவுற்றுத் திகழ்கிறுர்!

காமராஜ்—தமிழ் நாட்டுக் காந்திஜி!

காமராஜ்—நேருஜியின் நிதர்சனமான ஆன்மா!

இந்திய ஜனநாயக சோஷலிஸக் குடியரசுத் தத்துவத்துக்குக் காமராஜ் ஓர் உத்தாரணம்!

இந்திய தேசிய ஒருமைப்பாட்டின் அனுபவபூர்வமான உண்மைக்குக் காமராஜ் ஓர் உதாரணம்!

"நாம் தீவிரமான நடவடிக்கைகளை மேற்கொண்டால்தான் நமது பொருளாதார, சமூகப் பிரச்னைகளுக்குத் தீர்வுகாண முடியும். நமது மக்கள் பயனடைய வேண்டும் என்பது நம் பொருளாதாரத் திட்டத்தின் நோக்கம். இந்த நன்மைகள் மக்கள் அனைவருக்கும் கிடைத்தாகவேண்டும். ஏழ்மை, அறியாமை, நோய் முதலிய கேடுபாடுகள் நமது முக்கிய விரோதிகள். இவை அகற்றப்படும் வரை நாம் அயராது தொடர்ந்து பாடுபட வேண்டும். ஆகஸ்ட் 15ம் தேதி நாட்டின் நலனுக்கு நம்மை அர்ப்பணிக்கும் நாளாகும். வெற்றிகளையும் தோல்விகளையும் நாம் கணக்கிட்டுப் பார்த்துவிட்டு, முன்னேற்றப் பாதையில் செல்ல வேண்டும். நாட்டுக்காக உயிர்த் தியாகம் செய்த பெரியார்களை நாம் இன்று மனதார நினைத்து அஞ்சலி செலுத்த வேண்டும். பெயர் தெரியாத லட்சக்

கணக்கான தியாகிகளின் முயற்சிகள் வீண் போகவில்லை. இவர்களில் மாபெரும் தலைவர்களான காந்திஜியும் நேருஜியும் இப்பொழுது நம்மிடையே இல்லை. ஆனால் அவர்கள் காட்டிய வழியில் நாம் சென்று முன்னேற்றம் காண வேண்டும்!

நாம் அரசியல் சுதந்திரம் பெற்றுவிட்டோம். பொருளாதாரப் பிரச்னையிலிருந்து விடுதலை அடைய வேண்டும். நமது மக்கள் மீது நம்பிக்கை வைத்து, இப் பிரச்னையை நாம் தீர்க்க வேண்டும். வருமான ஏற்றத் தாழ்வுகள் குறைய வேண்டும். சிலபேர்களிடம் செல்வம் ஒருசேர குவிவது கட்டுப்படுத்தப்பட வேண்டும். நில உடைமையும் பூரணமாக மாற்றப்பட வேண்டும்.

நாம் சமாதானத்தை விரும்பும் மக்கள். அண்டை நாட்டு மக்களுடனும் உலக மக்களுடனும் சமாதானத் துடன் வாழ விரும்புபவர்கள். தாழ்வான நிலையில் உள்ள நம் மக்களை முன்னேற்றத்துக்குக் கொண்டுவர வேண்டும். இதற்காக இமயப் பிரயத்தனம் செய்து வருகிறோம். நமது தற்காப்பும் அபிவிருத்தி அடைய வேண்டும். சோஷலிஸம் உருவாக நாம் ஒன்றுபட்டுச் சேவை செய்வோம் என்று உறுதிகொள்வோமாக!...”

இவ்வாண்டுச் சுதந்திர நாள்ச் செய்தியாக விடுத் திருந்த தலைவர் அவர்களது இதய ஒலியே மேற்கண்ட கருத்துரைகள்.

**1948,** ஜூன் 20ல் மவுண்ட் பேட்டன் தம்பதி இந்தியாவிலிருந்து விடை பெற்றபோது, “எத்தனைதான் ஏற்றமான பொருள்களும் பரிசுகளும் கிடைத்தாலும், மக்களின் அன்புக்கும் வாஞ்சைக்கும் மேலானது ஒன்றுமே இருக்க முடியாது!” என்று சுட்டினார் சத்தியத்தின் ஜோதி. அவர் வாக்கு அமரத்வம் வாய்ந்தது.

சமதர்ம இலட்சியவாதி காமராஜ் அவர்களின் தியாகத் தழும்புகளும் இடைவிடாத நாட்டுப் பணிகளும் அவரை, இன்று, 'பொது மக்களின் மனிதராக' ஆக்கிவிட்ட விந்தைக்கு ஈடேது, எடுப்பேது? இந்தியப் போர்முனைப் பகுதிகளுக்கு அவர் நேரிடையாகச் சென்று ஆற்றிய வீர உரைகள் நாடு எப்போதுமே மறக்க முடியாது!

பாரத மக்கள் காமராஜரை தங்களின் பிம்பமாகவே கருதுகிருர்கள். மற்ருெரு காந்தியாகக் கருதுகிருர்கள்! என்று 'இல்லஸ்ட்ரேட் வீக்லி ஆப் இந்தியா' ஆசிரியர் குறிப்பிட்டதை யாவரும் நினைவில் பூசனைசெய்வர்!

சென்னை மெரினு கடற்கரையில் 2—10—65ல் மாபெருந் தலைவர் திரு. காமராஜ் அவர்கள் ஆற்றிய உரையை நாம் அனைவரும் நெஞ்சிலும் நினைவிலும் இருத்திக்கொள்ள வேண்டும்:

"... காஷ்மீர் நம்மோடு இணைந்தது இணைந்ததுதான்! அதிலே, நாம் உறுதியாக இருக்கிருேம் நமது உறுதி உலக சமாதானத்திற்கு நல்ல அஸ்திவாரம்!...

உலக சமாதானம் என்பதின் பெயரால் ஆக்கிரமிப்பாளர்களுக்கு காஷ்மீரைத் தானம் செய்வதென்ருல், உலகில் ஆக்கிரமிப்பு — மிரட்டல்களுக்கு முடிவே இருக்காது.

உலகில் நியாயத்துக்காக — சமாதானத்துக்காக அடிவாங்க நாம் எப்போதும் தயாராக இருக்கிருேம். நாம் நியாயத்தின் பக்கம் இருக்கிருேம். நேர்மையின் பக்கம் இருக்கிருேம். நியாயத்துக்கும் நேர்மைக்கும் உதவி செய்வோம்!...

நாம் எதற்கும் துணிந்து தயாராக இருக்கவேண்டும். அந்த உணர்ச்சி, மனப்பான்மை இருக்க வேண்டும். உலகத்தில் சமாதானத்தைக் காப்பாற்ற வேண்டுமானால், நமக்குச் சுயபலம் இருந்தால்தான் முடியும்.

காந்தியடிகள் அஹிம்சை என்றார் அல்லவா? பலவீனத்தாலா அப்படிச் சொன்னார்? — பலவீனர்களால் அகிம்சையைக் கடைப்பிடிக்க முடியாது! பலமானவர்களுக்குத் தான் சொன்னார் எனவே, நமக்குத் தைரியம் வேண்டும். நாம் மானத்தோடு வாழவேண்டும். ஆகவே, எந்த நிமிஷத்திலும் நம்முடைய கடமையை நாம் நமது தாய் நாட்டுக்காக — நம் தேசத்துக்காகச் செய்யவேண்டும் என்ற உணர்ச்சி உண்டாக வேண்டும்.

இன்று எங்கே போனாலும், இந்த நிலையில் நாங்கள் என்ன செய்ய வேண்டும்? எங்களுக்கு என்ன வேலை? என்று மக்கள் துடிப்புடன் கேட்கிறார்கள்.

இவ்வளவு நல்ல எண்ணமும் துடிப்பும் எப்போதும் நாட்டில் இருந்ததில்லை. இந்த நல்ல தியாக மனப்பான்மையை நல்ல முறையில் பயன்படுத்தி, நாட்டின் நலனுக்காகக் காரியம் செய்துகொள்வோமேயானால், மகாத்மா காந்தியடிகளுடைய இலட்சியம் நிறைவேறும். சுயமரியாதையுடன், தன்மான உணர்ச்சியுடன் வாழ்வதற்கு உறுதிகொள்வோம். அப்போது உலக அரங்கிலே நமக்கு மரியாதை தானாகவே வரும்!...

**"தாழ்வுற்று, வறுமை மிஞ்சி, விடுதலை தவறிக் கெட்டு, பாழ்பட்டுக் கிடந்த பாரத தேசந்தன்னை" வாழ்விக்க** வந்தார் மகாத்மா காந்தி.

காந்திஜிக்கு வாரிசாக நேருபிரான் இருந்தார்.

இன்று அந்த மாபெருந் தலைவர்கள் இருவருமே நம்மிடை இல்லை.

ஆனால், காமராஜ் இருக்கின்றார்!

ஆம்; பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் சரித்திரத்தை ஒரு புத்தம் புதிய சரித்திரத்தைச் சிருஷ்டி செய்துவிட்டார்கள்!...

O 'இந்தி சீனி பாய்! பாய்!
O என்று சொல்லி,
O நம்மையும்
O சொல்ல வைத்தவன்
O சீனுக்காரன்,
O மண் ஆசை அவனுக்கு
O மரணவெறியை
O ஊட்டி விட்டிருக்க
O வேண்டும்.
O அவனுக்கு அண்ணன்
O பாகிஸ்தான் காரன்!
O பாரதம் பண்பிற்கு
O உறைவிடம் அல்லவா?
O கருத்து வேறுபாடுகளை
O ஒதுக்கி வைத்தார்கள்
O கட்சித் தலைவர்கள்.
O களம் புகுந்தார்கள்.
O நம் நாட்டுக்கு
O என்றுமே
O எழுச்சியூட்டும்,
O நமது
O அமரத் தலைவர்களின்
O அறவுரைகள்!

# மகாத்மா வாழ்த்துவார்!

# மகாத்மா வாழ்த்துவார்!

"பாரதநாடே! உன்னுடைய பெண்மையின் இலட்சியம் சீதா தேவியும், சாவித்திரியும், தமயந்தியும் என்பதை மறவதே! நீதொழும் தெய்வமாகிய உமாபதி யோகியரில் சிறந்த யோகி, தியாகியரில் சிறந்த சங்கரன் என்பதை மறவாதே. இந்தியனே! உன் மனமும் பணமும் வாழ்வும் ஐம்புலன்களால் எய்தக்கூடிய இன்ப துன்பத்துக்காக ஏற்பட்டதல்ல: உன் ஒருவனுடைய சுய இன்பத்துக்காக ஏற்பட்டதல்ல என்பதை மறவதே. அம்பிகையின் நைவேத்தியபீடத்தில் அவளுக்கு நிவேதனமாவதற்கே ஒவ்வோர் இந்தியனும்படைக்கப்பட்டிருக்கிருன் என்பதை மறவாதே! ஜகன்மாதாவுடைய இயல்பின் பிம்பமே இந்தியாவின் சமூக அமைப்பு என்பதையும் மறவாதே, இழிந்தகுலத்தோடும், அறிவற்றவரும், வறியர்களும்: செருப்புத்தைப்போரும், தோட்டிகளும் உன்னுடன் இரத்த சம்பந்தம் உள்ள சோதரர் என்பதை நிணைவு வைத்திரு!

"இந்தியனே! நீ வீரனுவாய்; தீரனுவாய்; துணிவு பெறுவாய்; நீ ஓர் இந்தியன்; எல்லா இந்தியர்களும் என் உடன் பிறந்தான், என்று பெருமையோடு பறையறைவாய், அங்கவீனராயினும், அறுதையாயினும் எல்லோரும் உன் சோதரர் என்று கொள். 'அந்தணுயினும் அரிஜனுயினும் இந்தியர் யாவரும் என் சகோதரர்கள்' என்று முழங்கு. எல்லா இந்தியனும் என் உடன் பிறந்தோர்; எல்லா இந்திய மக்களும் என் உயிர். இந்தியாவின் தேவதேவிகளே நான் வழிபடும் தெய்வங்கள். இந்திய மக்கட்குலமே என் குழந்தைப் பருவத்தொட்டில். அதுவே என் வாலிபப் பருவத்தில்

மணம் தந்த மலர் வனம்-அதுவே முதுமையில் நான், அடையப்போகும் காசியும் பரமபதமுமாகும்' என்று உரக்கக் கோஷமிடு. "பாரத மண்ணே எனக்கு விண்ணுலகு; பாரதத்தின் சிறப்பே என் சிறப்பு" என்று முழங்கு!

"உலகின் தாயே! எனக்கு ஆண்மையினைத்தா. பராசக்தியே! என் பலவீனத்தை ஒழித்துச் சக்தி அருள்! என் இயலாமையைப் போக்கி என்னை ஆண்மகனுக்கு," என்று அல்லும் பகலும் பிரார்த்தனை புரிந்துவா!...."

மனிதனுகப் பிறந்து, மனிதருள் மாணிக்கமாக வாழ்ந்து, தெய்வமனிதனுகவும் அமரத்துவம் எய்திய சுவாமி விவேகானந்தரின் நூற்றுண்டு விழாவினை பாரதம் சிறப்பு மிளிரக் கொண்டாடியது.

சீனமிலேச்சன் அண்டிக் கெடுத்து விட்ட வஞ்சகப் பெருங்கதை 'முடியவில்லை—தொடரும்' என்று சொல்லாமல் சொல்லிக் கொண்டிருக்கின்ற நேரத்தில், விழா நடத்துவது பொருந்தாது எனினும், சுவாமிகளின் விழா, முன் நடந்த பாரதி விழாவைப்போல சமயச்சிறப்புடையதாகும். அதாவது, சந்தர்ப்பங்கள் ஒன்று கூட்டிக் காட்டியுள்ள வீரமுழக்கத்தின் இருவேறு வகைப்பட்ட சிங்கநாதங்களின் சங்கு முழக்கங்களை நாம் கேட்டு, தெளிந்து, வீரம் ஊட்ட வல்ல ஒரு தத்துவமாக வழிவிட்டு, வழிபடச் செய்யவல்லது இவ்வீர விழா.

அயலவனின் சூதும் வாதும் நமக்கு வேதனை அளித்துவரும் கட்டத்தில் நாம் பல நாட்களாகவே இருந்து வருகிறோம்.

சண்டைத்தீயின் முதற்பகுதி அணைந்தது. அல்லது, அணைக்கப்பட்டதாக, தீவைத்தவனே அறிவித்தான்.

தீயின் வெம்மையை நாம் பல்வகையிலும் உணர்ந்து விட்டோம். பல்வேறுவகைப்பட்ட சக்திகள் பூராவையும் நாம் ஒன்று திரட்டி, நமது நாட்டின் பொது எதிரியை விரட்டியடிக்க கங்கணம் பூண்டுவிட்டோம். நீதியும் நிதியும் நம் பக்கம் குவிந்து வருகின்றன!

இந்நிலையிலே, இந்திய-சீன எல்லைத் தகராற்றினை சமரசப்பண்பு மூலம் 'ராசி' பண்ணிவைக்க 'கொழும்பு' முன்வந்தது. இலங்கை, கானு, ஐ. அ. குடியரசு ஆகிய நாடுகளின் பிரதிநிதிகளின் ஒத்துழைப்பும் நல்லெண்ணமும் முன் வந்தன. கொழும்பு மாநாட்டின் யோசனைகள் லோக்சபையில் விவாதிக்கப்பட்டு ஒரு முடிவு காணவேண்டும்.

"1962 செப்டம்பர் 8ம் தேதிக்கு முன் இருந்த நிலைகளுக்கே சீனப்படைகள் வாபஸாக வேண்டும் என்ற இந்தியாவின் பிரதானமான கோரிக்கையைத் திருப்தி செய்வதாகவே உள்ளன!" என்று நம் பிரதமர் நேருஜி அறிவித்தார்.

ஈனப்புத்தி படைத்த சீனர்களின் பாரம்பரியப் படுமோசப் புத்தியை இந்தியா இனியும் அனுமதிக்காது என்பது உறுதி!

சுவாமிகள் அன்று சொன்னார்:

"இந்தியாவை இனியாரும் அடக்கமுடியாது. இனியும் அது தூங்கப்போவதில்லை. அந்நிய சக்திகள் எவையும் அதனைப் பின்னுக்கு இழுக்க முடியாது. காலம் கடந்த இந்தியா இப்பொழுது எழுந்து நிற்கத் தொடங்கி விட்டது!"

ஆம்; இந்தியா எழுந்து நிற்கத் தொடங்கி ஆண்டுகள் பல ஆகிவிட்டனவே!

நீதி கடந்து, நிர்ணயிக்கப்பட்ட எல்லை கடந்து வந்த சீனனை இந்தியா விரட்டித் துரத்தியடித்ததே தக்க சான்றல்லவா?

சுவாமிகள் எதிர்பார்த்த இந்தியாவின் புத்துயிர் வாழ்வு மலர்ச்சி எய்தத் தொடங்கி விட்டது.

இந்தியன் ஒவ்வொருவனும் தன் ஆற்றலை, கடமையை நாட்டுப்பற்றை உணரத் தலைப்பட்டு விட்டான்.

இதுவே இந்தியாவின் மகத்தான வெற்றியன்றோ!....

குடியரசு நாளின் மகத்துவம் இவ்வாண்டு கூடுதலான குதூகலத்துடன் கொடிக்கட்டிப் பறந்தது. 'புவிக்குள்ளே முதன்மையுற்ற' அண்ணல் காந்தியடிகளின் அமர நினைவுக்கு நாம் செலுத்தும் அஞ்சலிகள் நமக்கு வீரசக்திகளை அருளும் என்பது உறுதி!....

O கருணை வள்ளலாம் புனிதர்
O மகாத்மாவை அரை
O நிர்வாணப் பக்கிரியாக
O மாற்றிய ஆலவாய்த்
O திருநகரிலே அகில
O இந்தியக் காங்கிரஸ்
O கமிட்டி விழா, விழாக்
O கோலம்
O பூண்டிருந்தது

# நேருஜியின்
# உலகம் சுற்றுகிறது

# நேருஜியின் உலகம் சுற்றுகிறது!

சோவியத் அரசாங்கம் மத்திய பசிபிக் மகா சமுத்திரத்தில் ஐம்பது மெகாடன் ராட்சஸ அணுகுண்டை வெடித்துச் சோதனைகள் செய்து பார்த்ததாகச் செய்திகள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. உலகின் பல்வேறு நாடுகள் ருஷ்யாவின் இந்த அதிசயத் திருவிளையாடலைக் கண்டு மனம் குழம்பி வருவதை எல்லா நாளிதழ்களும் சொல்லி வருகின்றன. இப்படிப்பட்ட விண்முட்டும் விந்தைச் செயல்களைக் கண்டு நம் பாரதப் பிரதமர் அதிர்ச்சி அடைந்தார். எனவே, "ஐந்து கோடி டன் அணுகுண்டு வெடிப்பது போன்ற காட்சிகளை நடத்துவது பெரிய நாடுகளின் அந்தஸ்துக்குப் பொருத்தமானதல்ல," என்று எச்சரித்திருக்கின்ருர். அணுகுண்டுச் சோதனைகளை அடியோடு தடை செய்யக்கூடிய ஏதாவது ஓர் ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டிய தன் அவசியத்தையும் வற்புறுத்தியிருக்கிருர். அத்துடன், இந்தியாவாலும் அணுகுண்டு உற்பத்தி செய்ய முடியு மென்று சவால் விடவும் நேருஜி தவறவில்லை!

உலகம் போற்றும் உத்தமத் தலைவர் நேருஜியின் உலகம், அன்பு-சமாதானம் ஆகிய காந்தீயக் கொள்கை களினுல் ஊட்டம் பெற்று, வலுவடைந்து, விரிவு பெற்றிருக்கிறது. இதே நேரத்தில், தமிழகத்தைப் பொறுத்தமட்டிலே நேரு பிரானின் பணிகள் எந்த அமைப்பில் நடைபெற்றிருக்கின்றன, அவை பொது மக்கள் மனத்தில் எவ்வகையில் பதிந்து பிரதிபலித்து வருகின்றன, இதன் விளைவாக, வெவ்வேறு கட்சிகள் எப்படி எப்படி இயங்குகின்றன என்பதைப்பற்றி யெல்லாம் மக்கள் திட்டவட்டமான ஒரு கருத்தைப்

பெற்றிருக்கப் பழகி விட்டார்களென்பதை நாம் நினைவு படுத்த வேண்டும்.

இந்தியத் துணைக் கண்டத்தின் தலைநகரில் ‘தேசிய ஒருமைப்பாடு’ மாநாடு நடந்தது, முடிந்தது. பெயரளவில் பெரிதாகத் தோன்றி, ஆனல், கொள்கை அடிப்படையில் குறுகிய உள்நோக்கம் கொண்டு இயங்கி முடித்திருக்கும் மேற்கண்ட மாநாட்டில் கலந்துகொள்ளும் வாய்ப்பு தேசிய ஐக்கியப் பான்மையை வளர்த்துவரும் அமைப்புக்களுக்குக்கூட கிடைக்கவில்லை. இத்தகையப் பொதுவான குறைபாடுகளை விலக்கிக் காட்டும் வகையில், நேருஜியின் பேச்சு விளங்கியது. “இந்தியாவின் பொதுலிபியாக தேவநாகரிலிபியே என்ருவது ஒரு நாள் வந்தே தீரும்,” என்று பாரதத்தின் முதல்வர் பேசியிருந்ததை நாம் எவ்வாறு மறக்கமுடியும்? தாய்மொழியின் இன்றியமையாத் தன்மையைப்பற்றி அவ்வப்போது பேசியும் எழுதியும் வந்திருக்கிருர் மகான் காந்தியடிகள். அப்படியிருந்தும், நேருஜி எவ்வாறு பேசியிருக்கிருரென்ருல், நாம் மனம் வருந்தாமல் இருக்க முடியுமா? தேசிய இனங்களின் ஒற்றுமை மாநாடு என்ற கூட்டுறவில் அந்த மாநாடு கூட்டப்பட்டிருந்தால், அந்தந்த மாநிலத்தின் தாய்மொழிக்குப் பாதுகாப்பும் வாழ்த்தும் அதிகாரபூர்வமாகக் கிடைத்திருக்குமே! அலிகார் வகுப்புப் பூசல் போன்ற சில்லறைச் சிக்கல்கள் நாணயமான முறையில் தவிர்க்கப்பட்டிருக்கவும் கூடுமல்லவா?

மதுரை மாநகரம் புராணத்தலம். திருவிளையாடல்களின் நாயகனுக சோமசுந்தரக் கடவுள் இயங்கியதுபோல, அத்திருவிளையாடல்களுக்கு அடித்தளமாக அமைந்தது ஆலவாய்ப் பெருநகரான மதுரையேயாகும். இங்கேதான் காந்தி மகாத்மா ‘அரை நிர்வாணப் பக்கிரியாகவும் மாறினுர்.

இத்தகைய பெருமை கொண்ட மதுரைநகர் தேசியப் பான்மையிலும் பெருமை கண்டது. அகில இந்தியக்

காங்கிரஸ் கமிட்டி நடந்து முடிந்தது. தேர்தல் அண்டி வரும் நேரம் இது. இதற்குகந்த வழியில்தான், சடங்குகளும் பேச்சுக்களும் அமைந்திருந்தன. "பல பலஹீனங்களும் பல தவறுகளும் இருந்த போதிலும், ஒருநாடு என்ற முறையில், இந்தியா உலகில் உன்னத ஸ்தானம் வகிக்கிறது. பிற நாட்டார் அதைக் கௌரவிக்கிறார்கள். அதற்கு மரியாதை செய்கிறார்கள். அதன் குரலுக்கு உலகில் இன்று செல்வாக்கு இருக்கிறது. இந்யதிாவின் உள்நாட்டு, சர்வதேசக் கொள்கையில் ஒரு நேர்மை இருப்பதே அனைத்திற்கும் காரணம்." என்று மதுரை வரவேற்பில் நேருஜி குறிப்பிட்டார்.

நாம் பெருமைப்பட வேண்டிய செயல்தான். ஆனால் தமிழ் இனத்தவர் மன அமைதி கொள்ளுவதற்கான வகையில் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்க இம்மாநாடு பூரணமாக முயற்சி செய்ததாகச் சொல்லமுடியாது!

- அறவழிப்பண்
- பிணை வழிபடும்
- பாரம்பரியம்
- கொண்டது
- நம் பாரதம்
- சமாதானப் புருவென
- வருணிக்கப்பட்ட
- நேருஜி அணு
- ஆயுத எதிர்ப்பு
- மாநாட்டில்
- அன்று கூறிய
- உரைகள்
- உலகப் புகழ் பெற்றன:

# அணு ஆயுத வல்லரசுகளுக்கு வழிகாட்டுகிறது பாரதம்!

# அணு ஆயுத வல்லரசுகளுக்கு வழிகாட்டுகிறது பாரதம்!

இந்தியத் துணைக் கண்டத்தின் தலை நகரில் 'அணு ஆயுத எதிர்ப்பு மாநாடு' ஒன்று அண்மையில் நடந்தேறியது. அணுப் படைக் கலங்களைத் தடுத்து நிறுத்தித் தடைசெய்ய வேண்டியதற்கான அவசியச் சூழல்களைப்பற்றி ஆராய்ந்தது இம் மாநாடு.

அப்பொழுது, நேருஜி இவ்வாறு குறிப்பிட்டார்:

"...முழு படைக் குறைப்பு என்கிற முதல் லட்சியப் புள்ளியை அடைவதற்கான முதலாவது அவசியமான நடவடிக்கையாக, பயங்கரமானதும் ஒதுக்கத் தக்கதுமான இந்த அணு ஆயுதச் சோதனைகளை, அணு ஆயுத வல்லரசுகள் ஒருதலைப் பட்சமாகவேனும் நிறுத்த வேண்டும். காலமோ குறைவு; அணுக்குண்டுச் சோதனைகளுக்கு விரைவில் ஒரு தீர்க்கமான முற்றுப் புள்ளி வைக்காவிட்டால், பிறகு எந்த நாட்டினாலும், ஏன், எந்த மனித குலத்தினாலும் நிறுத்த முடியாத அளவிற்கு ஆபத்துக்கள் தலைக்குமேல் போய்விடக்கூடும். இந்தக் குறுகிய காலக்கட்டத்திலே, மனித குலத்தின் நல்லறிவுக்கும் புதுப்பயத்துக்கும் இடையே நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஒரு போட்டியாகவே, இவ்விதமான அச்சுறுத்தும் சோதனை அமைந்துள்ளது. ஒருசில அணு ஆயுதச் சோதனைகளை நிறுத்திவிட்டால் மட்டும், இத்தகைய பயங்கரமான நெருக்கடிக்குத் தீர்வுகண்டுவிட முடியாது. உண்மைதான். ஆனால், அதைவிட மேலான ஒன்றினால், அதாவது, மனிதாபிமானம், மனப்பக்குவம், நெறியுணர்வு போன்ற குண நலக் குறிப்புக்கள் பக்குவம்

பெற்று உயர்ந்த நிலைக்கு வந்தால்தான், இம்மாதிரியான அச்சம் ஊட்டும் சிக்கல்களும், பயங்காட்டும் நெருக்கடிகளும் தீர முடியும்! எனவே, உறுதி படைத்த நம்பிக்கையினாலும் வலிமையினாலும் இக்குறிக்கோளை மனிதகுலம் அடைந்தேதீரும். ஒரு சார்பாகப் படைக் குறைப்புக்கு வழிசெய்வதைக் காட்டிலும், ஒருசார்பாக, அணு ஆயுதச் சோதனைகளை நிறுத்துவதுதான் எளிதான செயலாகும்! ”

அண்ணல் காட்டிய வழி நடக்கும் நேருஜியின் பேச்சில், காந்தியத்தின் அறநெறிப் பண்பும், பஞ்சசீலக் கொள்கையின் நேர்மை கொண்ட மனிதாபிமான உணர்வும் பின்னிப் பிணைந்து, அவ்விணைப்பின் விளைபலனாக, உயர்ந்த தத்துவ போதனைக் கருத்துக்கள் பல நிறைந்து விட்டிருக்கின்றன. அழிவிலிருந்து மனித குலத்தைக் காப்பாற்றும் பொதுநலப் பண்புடன் நேருஜி பேசியுள்ள பேச்சுக்கள், அணு ஆயுத வல்லரசுச் சக்திகளின் முழுக் கவனத்தையும் கவரவேண்டுமென்பதே இந்தியத் துணைக்கண்டத்தின் கவலையும் கடமையுமாகும்.

இவ்வகையில், எத்தகைய உடன்பாட்டிற்காகவும் காத்திருக்காமல், பாரதம் தன்னளவிலே, படைக்கலத் தவிர்ப்பினைச் செயற்படுத்துவதன் மூலம், உலக நாடுகளுக்கே முதல் வழிகாட்டியாகவும் அமையவேண்டுமென்று டாக்டர் இராஜேந்திர பிரசாத் அவர்கள் விரும்பிக் கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

இந்த அணுகுண்டு உற்பத்திப் போட்டியைத் தடுக்காவிட்டால், ஏற்படக் கூடிய விளைவுகளையும் பிரசாத் அவர்கள் வெகு அழுத்தமான குரலில் எடுத்துரைத்திருக்கின்றார்:

அவையாவன:

1. அணு குண்டு யுத்தம் ஏற்பட்டு, உலகில் உள்ள மக்கள் அனைவரும் மடிந்து மண்ணாகி, மனித நாகரிகம் அழிந்து, இவ்வுலகமே அணு விஷச் சாம்பல் நிறைந்து பாலைவனமாகிவிடலாம்.

2. அல்லது, வெளி கிரகங்களுக்குச் செல்வதில் போட்டா போட்டி ஏற்பட்டு, அந்தக் கிரகங்களில் அணு குண்டுகளை வெடிப்பதால், இந்த வானவெளியில் கிரங்களின் போக்கு பாதிக்கப்பட்டு, உலகுக்கு அபாயம் ஏற்படலாம்.

3. அல்லது, அணு குண்டுகளை உற்பத்தி செய்வதில் பெரும் பணத்தைச் செலவிடுவதால், அதில் ஈடுபட்ட நாடுகள் திவாலாகி, உலகமே பெரும் சேரியாக மாறிவிடும். மக்கள் பீதி நிறைந்த கிறுக்கர்களாகி விடவும் கூடும்.

உலகத்தின் பொதுப்படையான அமைதியைச் சீரழிக்கவல்ல அணு குண்டு உற்பத்தியையும் சோதனைகளையும் ஐ. நா. மூலம் தடைசெய்ய வேண்டுமென்றும், அத்தகைய வரம்புக் கொள்கையை ஏற்க மறுக்கும் நாடுகளை ஐ. நா. விலிருந்து வெளியேற்றிவிட வேண்டுமென்றும் முன்னாள் கவர்னர் ஜெனரல் எடுத்துக்காட்டியிருக்கிறார்.

ஆக, பலதரப்பட்ட சிந்தனையாளர்களின் கருத்துரைகள் வகுத்துக் காட்டும் பொதுநல நோக்கை உலக நாடுகள் அனைத்தும் நன்கு உணர்ந்து, முனைப்புடன் செயற்பட்டால், இதன் நற்பலனாக, அணு ஆயுத வல்லரசுகள் மனம் திருந்தி நடக்க வாய்ப்பு ஏற்படாமல் தப்ப முடியாதல்லவா? இப்படிப்பட்ட விடிவு நிலை உதயமாகும் பொழுது, வல்லரசுகட்கு இடையே ஊடாடும் அவநம்பிக்கை, ஆதிக்க வெறி, ஐயம், அச்சம் போன்ற

பயங்கரத் தன்மைகளும் மறைந்து, சுமுகமான உறவு தழைக்கவும், தார்மீகப் பண்பு செழிக்கவும் வழி பிறந்து விடும். ஆகவே பாரதத்தின் நல்லெண்ணக் கருத்துக்களைச் சிந்தையில் இருத்திச் செயற்பட வேண்டியது அணு ஆயுத வல்லரசுகளின் முதற் கடனாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இதே நேரத்தில் மகாத்மா காந்தியடிகளின் அகிம்சைத் தத்துவப் பொன் மொழிகள் சிலவற்றையும் மேற்படி வல்லரசுகளின் கவனத்துக்குக் கொண்டுவர விழைகின்றோம்.

“அகிம்சை என்பது ஓர் ஆக்கசக்தி. அதுவே பலவான்களின் ஆயுதம், ஆண்மைக்கு அழகு அகிம்சை.... அகிம்சை என்பதே ஒரு விஞ்ஞானம்!....”

- 1962–டிசம்பர், 11.
- தேசிய மகாகவி
- பாரதியாரின்
- விழாவை யொட்டிய
- சிந்தனைகள்.
- கவிஞன் எனில்
- முக்காலமும்
- உணர்ந்தவன்
- அல்லவா?
- நன்ருகச் சாடியிருக்கிருர்
- வஞ்சகச் சீனனே!...
- என்றும் தேவை
- இம்மாதிரிப் பாடல்கள்!...
- பேராசைப்
- பாகிஸ்தானுக்கும்
- அருமையான
- பாடம் கற்பிக்கும்
- இப்பாக்கள்! ..

# "பாரதநாடு பார்க்கெலாம் திலகம்!"

# “ பாரதநாடு பார்க்கெலாம் திலகம்! ”

“ நாம் அனைவரும் இந்தியர்: நமது தாய்நாடு பாரதம். இயற்கையாகவே நாம் விரும்பி மேற்கொண்டது இந்திய தேசம்.

பாரத நாட்டுக்கு இன்று ஏற்பட்டுள்ள நெருக்கடியான நிலைமையில் நாம் அனைவரும் ஒன்றுபட்டு நிற்போம். தலைவர் நேரு அவர்களின் வழி நடப்போம்.

பாரதத்தைப் பாதுகாக்க உடல், பொருள், ஆவி ஆகிய அனைத்தையும் தியாகம் செய்ய நாம் சித்தமாக இருக்கிறோம்.

இந்த உறுதி மொழியை நிச்சயம் கடைப் பிடிப்போம். தேசீய மகாகவி சுப்பிரமணிய பாரதியார் மீது ஆணை! ”

பாட்டுக்கொரு புலவன் என்று ஏற்றிப் போற்றப் படுகின்ற பாரதியாரின் எண்பத்தோராவது பிறந்தநாள் விழா டிசம்பர் 11ம் தேதியன்று தமிழகத்தின் தலைநகரில் வெகு சிறப்புடன் நடந்தேறியது. அவ்வமயம், நம் நம் மாநில முதலமைச்சர் காமராஜர் மேற்கண்ட பாதுகாப்புப் பிரக்ஞையை மேற்கொள்ள, மக்கள் கூட்டம் தலைவரின் ஆணைக்குக் கட்டுப்பட்டது: கட்டுண்டது!

பலவகையிலும் சிறப்புடையதாக விளங்குகிறது இவ்வாண்டின் பாரதி விழா. இதுவரை பாரதி மறைந்த நாளையே நாம் பாரதி விழாவாகக் கொண்டாடினோம்.

கவிக்கு இறப்பில்லை என்ற உண்மையை உணர்ந்து, இப்பொழுது, பாரதி பிறந்த நாளையே பாரதி விழா வாகக் கொண்டாட முற்பட்டிருக்கிறோம். அத்துடன் பாரதி விழா அரசாங்க விழாவாகவும் கௌரவிக்கப்பட் டிருக்கிறது. காலத்தினால் இறவாத நாட்டுப் பற்றுக் கவிகளைப் படைப்பவனே மக்கள் கவிஞனாகவும் தேசிய மகாகவியாகவும் இறவாப் புகழ் எய்த முடியும். இவ்வகையில் பாரதியின் தேசப்பற்றும் தியாகமனமும் அயலவனைச் சாடுகின்ற வீரமுழக்கமும் அனைவரும், ஒன்றுபட வேண்டு மென்கிற தேசிய ஒருமைப்பாட்டுக் குணமும் அவரது பாடல்களிலே விரவிக் கிடப்பதை நாம் காண்கிறோம். அப்படிப்பட்ட கவிதைகள், இன்றைய நம் நாட்டின் நிலையில் அடுத்துக்கெடுத்த ஈனச் சீனர்களின் மண்ணாசை வெறியினால் நம்மை வலிய வம்புக்கு இழுத்துக்கொண்டிருக்கின்ற இந்தச் சங்கட மான நிலையில், நமக்குப் போர்ப் பரணிபாடி, நம்ம வர்களிடையே தேசீய எழுச்சியையும் நல்க பெரிதும் உதவியாக இருந்து வருகின்றன.

கண்ணீரால் காக்கப்பட்டிருககும் நம் சுதந்திரப் பயிரைக் கட்டிக்காக்க பாரதியார்படும் கவலை கொஞ்சமா, நஞ்சமா?

கிழக்கொன்றுமாகவும் மேற்கொன்றுமாகவும், வடக் கொன்றாகவும் தெற்கொன்றாகவும் சிதறிக் கிடந்த பாரத மக்கள் தங்கள் தங்களது கட்சிப் போர்வைகளை உதறி வீசி எறிந்துவிட்டு, எரிந்துகொண்டிருந்த நாட்டின் மானம் காக்கும் வேள்வியில் குதித்து, ஒன்றுபட்ட தேசிய உணர்ச்சி பூண்டு செயற்பட்டு வரும் இந்த மகத்தான ஐக்கியத்தைக் கண்டுமா, இந்தச் சீனன் வெருண்டு ஓடாமல் இருப்பான்? "ஆயிரம் உண்டிங்கு ஜாதி, அன்னியர் வந்து புகல் என்ன நீதி?" என்று பாடிய பாரதி இன்றிருந்திருந்தால், நமது இமயமலையில்

காலடி எடுத்து வைக்கும் துராசையே தோன்றிக்கூட இருக்காது!....

**" பாரதபூமி பழம்பெரும் பூமி;**
**நீரதன் புதல்வர்;**
**இந்நினைவ கற்றுதீர்!...**
**பாரதநாடு பார்க்கெல்லாம் திலகம்;**
**நீரதன் புதல்வர்**
**இந்நினைவ கற்றுதீர்! .."**

ஆஹா! தம் ஞானரதப் பயணத்தில் எத்துணை தீர்க்கதரிசனத்துடன் ஒவ்வொரு பாடலையும் முழங்கி யிருக்கிறுர் பாரதி!

வஞ்சகச் சீனனுக்கு மண்ணுசை பிடித்தவர்களின் கதை தெரியாது போலிருக்கிறது! நன்றி மறந்த நய வஞ்சகர்கள் இந்நேரம் நம் எல்லையை விட்டு மரியாதை யாக ஓட்டம் பிடிக்காமல் இருந்திருந்தால், உலக அரங்கிலிருந்தே அவர்களது மானமும் மரியாதையும் ஓட்டம் பிடிக்கவேண்டியதுதான் என்ற உண்மையை ராஜரீகமாக உய்த்துணர்ந்தோ என்னவோ, அவர்கள் இப்போதைக்கு ஒரு நாடகம் ஆடி, 'வாபஸ்' ஆகிவிட் டிருக்கிறுர்கள்! இல்லாவிட்டால், அவர்கள் பாடு என்ன ஆகியிருக்கும், தெரியுமா?

**மாரதர் கோடி வந்தாலும்-கணம்**
**மாய்த்துக் குருதியில் திளேப்பாள்!**

ஆம்; பாரத தேவியைப் பற்றி சீனர்கள் அறிய மாட்டார்கள்!

இந்தியாவுக்கு ஆயுதங்கள் வழங்குவதில் பிரிட்டனும் அமெரிக்காவும் போட்டா போட்டி யிடுகின்றன!

சமாதானம் நிலவவேண்டுமென கூடிய கொழும்பு மாநாட்டிலே சீனாவின் துராக்கிரமச் சூதுகள் அம்பலப் படுத்தபட்டு விட்டன!

உலக அரங்கிலுள்ள பெரும்பாலான நாடுகள் பாரத நாட்டின் தார்மீகமான நியாய வாதங்களை மதித்துப் போற்றி வருகின்றன!

இந்நிலையிலே, பொம்டிலாவில் மறுபடியும் இந்தியத் தாயின் மணிக்கொடி பறக்கிறது. "காந்திஜிக்கு ஜே! ஜெய்ஹிந்த்!" போன்ற கோஷங்கள் விண்ணதிர முழங்குகின்றன!

அமைதியில் நம்பிக்கை வைத்து, இந்திய-சீன எல்லைத் தகராறைத் தீர்க்க பல தேசத் தலைவர்கள் முனைந்து வருகின்ற நேரத்தில், இந்த பாழாப் போன நயவஞ்சகக் கூட்டத்தினர் மறுபடியும் போர்க்கருவிகளைக் குவிப்பதாகவும் வேவு விமானங்களை அனுப்பி உளவு பார்ப்பதாகவும் செய்திகள் வருகின்றன!

"நாம் அனைவரும் ஒன்றுபட்டு விட்டோம்!" என்று உணர்ந்து, அவ்வுணர்ச்சியில் விம்மிப் புடைத்துச் செயற்பட்டு நம் தாய்த் திருநாட்டை அல்லும் பகலும் காக்க ஆர்த்தெழுந்து விட்டார்கள் பாரத மக்கள். ஆகவே, நமக்கு ஏது இனி அச்சம்? சீனர்களை முழுமை யாக விரட்டியடிக்கும்வரை நமக்கு ஏது இனி ஓய்வு?

**"பச்சை யூனியைந்த வேற்**
**படைகள் வந்த போதிலும்**
**அச்சமில்லை யச்சமில்லை;**
**அச்சமென்பதில்லையே!**
**துச்சமாக வெண்ணி நம்மைத்**
**தூறு செய்த போதினும்,**
**அச்சமில்லை யச்சமில்லை;**
**அச்சமென்பதில்லையே! ."**

நம் குடியரசுத் தலைவர் குறிப்பிட்டாற் போன்று, தர்மமே வெல்லும்! நாமே வெல்லுவோம்!...

**" வெற்றிகூறுமின் ;**
**வெண்சங்கு ஊதுமின் !"**

இந்த வெற்றித் திருப்பாடலை வாழ்த்தி வணங்கி, நமக்குக் கடைசிவரையிலும் வெற்றிகளை அருளுமாறு பராசக்தியை வணங்குவோமாக!

- இதோ, 1967 தேர்தல்
- நெருங்கி
- வந்துகொண்டிருக்கிறது.
- இது,
- கடந்த தேர்தலின் நிலை!
- இது எப்போதுமே
- நினைத்துப்
- பார்க்கத் தக்கதொரு
- சிந்தனைத்
- தொடரே அல்லவா?

# " காங்கிரசுக்கே ஓட்டுப் போடுங்கள் !"

# காங்கிரசுக்கே ஓட்டுப் போடுங்கள்!

இந்தியத் துணைக் கண்டத்திலே எங்கு பார்த்தாலும், பொதுத் தேர்தலின் பரபரப்பு சுற்றிச் சூழ்ந்து கொண்டிருக்கும் நெருக்கடியான நேரம் இது. பாரதத்தின் எதிர் காலத்தைப்பற்றி நிர்ணயம் செய்யவேண்டிய கடமையும் பொறுப்பும், இந்நாட்டு மக்களின் வாக்குப் பதிவுகளிலே முடிவு பெற வேண்டிய வேளை இது. இன்னும் மூன்று வாரங்களில் இந்தியா முழுவதிலும் தேர்தல் நடக்க விருக்கிறது. இத்தகைய இக்கட்டான கட்டத்தில் இருக்கும் நாம், நம்மைப்பற்றியும் நம்மை ஆளும் காங்கிரஸ் மகாசபையைப் பற்றியும் நன்ருகச் சிந்தித்துச் செயற்பட வேண்டிய நிலையில் இருக்கின்ருேம்.

ஏறத்தாழ நூற்றைம்பது ஆண்டு காலமாக நாம் வெள்ளையரின் ஆட்சிக்கு அடிமைப்பட்டுக் கிடந்தோம். தாழ்வுற்று வறுமை மிஞ்சி விடுதலை தவறிக் கெட்டுக் கிடந்த பாரத தேசத்தை வாழ்விக்க வந்த ஜோதியாக அண்ணல் காந்தியடிகள் தோன்றினுர். உடல், பொருள், ஆவி அனைத்தையும் சர்வபரித் தியாகம் செய்து, பிறந்த நாட்டின் விடுதலைக்கென தங்களையே அர்ப்பணம் செய்ய மாபெருந் தலைவர்கள் பலர் முன் வந்தார்கள். அயலவரின் அடக்கு முறைச் சட்டங்களுக்கு அடங்கிக் கிடக்காமல், "வெள்ளையனே, வெளியேறு!" என்று கோஷமிட்டார்கள் : சிறைப்பட்டார்கள். பாரதத் தாயின் அடிமை விலங்குகளை அறுத்தெறிவதே தங்கள் தலையாய லட்சியம் என்ற முடிவைக் கைக்கொண்டு, "வந்தேமாதரம்" என்னும் தாரக மந்திரத்தை வான் முட்டப் பரப்பினுர்கள். இதற்கிடையிலே, மாவீரர்

நேத்தாஜி கடல் கடந்து சென்று, சிதைந்து கிடந்த இந்தியர்களை ஒன்று திரட்டி, சுதந்திரப் போராட்டத்திற்குத் தொண்டியற்றினர். "கட்டுண்டோம், பொறுத்திருப்போம்: காலம் மாறும்" என்ற கோட்பாட்டில் அறவழி நின்று, காந்தீய நெறி நடந்து வந்த பாரத நாடு விடுதலை பெற்றது. நாம் இருக்கும் நாடு நமது என்பதை உணர்ந்தோம். நம்மை நாமே ஆண்டு கொள்ளத் தலைப்பட்டோம்.

இந்தியத் துணைக்கண்டம் சுதந்திரம் பெற்றுப் பதினன்கு ஆண்டுகள் பூர்த்தியாகிவிட்டன. ஆசியாவின் ஜோதியான உலகப் புகழ்பெற்ற நேருஜி, தம் நெஞ்சில் காந்தியடிகளை நிலைநிறுத்தி, அவர் காட்டிய பாதையில் நடந்து, நம் நாட்டையும் நடத்தி வருகிறார். பஞ்சசீலக் கொள்கைகளை உலக அரங்கில் வைத்து, அதன் மூலம் இந்தியாவின் அறவழிப் பண்பாட்டை உலகநாடுகள் அனைத்தும் அறிந்துணரச் செய்துவரும் நேருஜியின் தலைமைப் பொறுப்பின் கீழ் 'ஐந்தாண்டுத் திட்டங்கள் ஒவ்வொன்றாகச் செயற்படுத்தப்பட்டு, வெற்றி பெற்று வருகின்றன. பொருளாதாரம், உணவு, தொழில் போன்ற எல்லாப் பிரிவுகளிலும் காங்கிரஸ் ஆட்சி, அந்நிய நாட்டவர்களும் கண்டு வியந்து போற்றத்தக்க அளவில் மகத்தான வளர்ச்சி பெற்று வருவதைப் பொதுமக்கள் அத்தனைபேரும் பரிபூரணமாக உணருவார்கள். தன்னகத்தே மாபெரும் வரலாற்றுப் பெருமையைக் கொண்டிருக்கும் நமது காங்கிரஸ் மகாசபைதான் இந்தியாவின் தன்னேரில்லாத உயிர்ச் சக்தி என்பதையும் அனைவரும் புரிந்துகொண்டிருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட நிலையில்தான், பொதுத் தேர்தல் அண்டி வந்து கொண்டிருக்கிறது. பலதரப்பட்ட கட்சிகள் தேர்தலில் போட்டியிடுகின்றன. ஐக்கிய இந்திய தேசியத்தில் பிரிவினையை வளர்க்க முனைந்த திராவிட முன்னேற்றக் கழகம், "திராவிட நாடு

அடைந்தே தீருவோம்!" என்று தம்பட்டம் கொட்டி, தம்மைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றும் அப்பாவி மக்களின் கண்களிலே மண்ணைத்தூவி, தங்கள் பைகளைப் பணத்தால் நிரப்பி வருவது உலகம் அறிந்த ரகசிய மாகும். திராவிடநாடு அடைவது பகற்கனவு என்பதைத் தமிழகத்தின் தலைவர்களும், தி. மு. க. விலிருந்து பிரிந்த படைவீரர்களும் பட்டி தொட்டிகளிலெல்லாம் நிரூபித்து விட்டார்கள்!

ஏழைகளைப் பகடைகளாக்கி, பணக்காரர்களை வாழ வைக்க திரை மறைவில் அரசியல் சூதாட்டம் ஆடி வருகிறார், பரிதாபத்துக்குரிய ராஜாஜி. அவரது செல்வாக்கு பறிபோய் விட்ட உண்மையை, டி. டி. கே. அவர்கள் எதிர்ப்பின்றி அடைந்த முதல் வெற்றி நிதர்சன மாக எடுத்தியம்பி வருகிறது.

சமதர்மப் பொதுவுடைமை வாதம் பேசி, பிறந்த மண்ணையே நம் எதிரிகளுக்குக் காட்டிக்கொடுக்கும் நாசகாரக் கும்பலாக கம்யூனிஸ்ட் கட்சிக்கு கேரளத் திலேயே வாழ்வு இல்லாதபோது, இங்கே மட்டும் எப்படி வாழ்வு ஏற்பட முடியும்? தேர்தல் களத்தில் குதிக்கப் போகும் பிற கட்சிகளின் பெயர்களைக்கூட பொது ஜனங்கள் அறிந்திருக்க முடியாது.

அண்மையில், பிரதமர் நேருஜி ஜலந்தரில் பேசுகையில், "காங்கிரஸ் கட்சியின் கொள்கைகளும் செயல் திட்டங்களும்தான் இந்தியாவை முன்னேற்றும்; திட்டமிட்டுச் செய்யப்படும் அபிவிருத்தியைத் தொடர்ந்து நடத்திச் செல்லும். மற்றச் சிறு கட்சிகள் தங்களுக்குள்ளேயே போரிட்டுக் கொண்டுதான் இருக்கும்," என்று உரைத்ததையும் நாம் என்றென்றும் நினைவிலும் நெஞ்சிலும் பதிய வைத்துக்கொள்ள வேண்டும். இந்தியாவை அச்சுறுத்திவரும் சீனு,

பாகிஸ்தான் போன்ற நாடுகள், நம்முடைய கோவா வெற்றி கண்டு, விரைவிலேயே மனந்தெளிவார்கள் என்பதும் உறுதி.

தமிழ்நாட்டின் தனித்தலைவரான மதிப்புக்குறிய காமராஜ் அவர்கள் குடியரசுதினக் கூட்டத்தில் "வறுமை ஒழியும் வரை காங்கிரசுக்கு ஓய்வே இல்லை!" என்று பேசினார்கள். தேசப்பற்று, தன்னலமின்மை, தியாகம், உழைப்பு, ஏழைகள்பால் கொண்டுள்ள ஈரம் போன்ற குணநலன்களால் எல்லாப் பொதுமக்களின் உள்ளங்களிலும் குடிகொண்டிருக்கிறார் நம் அன்புத் தலைவர் அவர்கள். அவரது தொண்டுகள் தாம் நம் தமிழகத்தின் மதிப்பையும் மாண்பையும் உயர்த்தி வருகின்றன.

இந்தச் சந்தர்ப்பத்தில், மாணவர் சமுதாயத்திற்கும் சில வார்த்தைகள் சொல்லவேண்டியது நம் கடமை. விடுதலை வேள்வியின் வரலாற்றைச் சரித்திரப்புத்தகத்தில் படித்ததின் மூலம் மட்டுமே அவர்களால் அறிய முடியும் படித்தறிந்த செய்திகளை எண்ணிப் பார்த்து, விடுதலைப் போரின் புனித வேள்வியைப் பக்தியுடன் போற்ற வேண்டும் அவர்கள். இந்தப் பண்பாடு நிரம்பப் பெற்றவர்களாகவே பெரும்பாலான மாணவர்கள் விளங்கி வருகிறார்கள். ஆனால், ஒரு சிலர், தங்கள் சொந்த வாழ்க்கைக்காக கட்சியை உபயோகப்படுத்தி, அதன் விளைவாக, மாணவர் சமுதாயத்தையும் நாட்டுக்கு விரோதமான வழிகளுக்கு வசப்படுத்தி வருகிறார்கள், இந்நிலை மாறவேண்டும். கட்சியின் பேரால் சீமான்களாக வாழும் பொய்த் தலைவர்களின் வேஷங்களை அறிந்து கொண்டு, அவர்களை மாணவர்கள் அம்பலப்படுத்த வேண்டும். அத்துடன், தனி மனிதர்களைவிட, தேசம்தான் பெரிது என்ற உண்மையையும் தெளிவாகப் புரிந்து கொண்டு, நாட்டுப் பணிக்கு உழைக்கப் பழகவேண்டும்!

ஆம் ; சொன்னதைச் செய்து காட்டி வருகிறது காங்கிரஸ் ஆட்சி. நெருங்கி வரும் தேர்தலிலும் காங்கிரஸே வெற்றி பெறப் போகிற தென்பதும் உறுதி.

காங்கிரஸ் ஆட்சியில்தான் இந்தியா மென்மேலும் வாழ்வும் வளமும், பேரும் புகழும் அடைய முடியும் என்ற உண்மையை மனத்தில் கொண்டு, பொதுமக்களாகிய நீங்கள் அனைவரும் காங்கிரஸுக்கே உங்களது மேலான வாக்குகளை அருள வேண்டுமென்று மிகப் பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்!

- 1962 தேர்தலில்
- காங்கிரஸ்
- மகத்தான வெற்றி
- பெற்றது
- அந்நிலையினை
- இப்போது
- எண்ணிப் பார்த்தாலும்
- சுவைதரும்.

# வெற்றி முரசம்

# வெற்றி முரசம்!

இந்தியத் துணைக்கண்டத்தில் கடந்த சில வாரங்களாக மிகுந்த பரபரப்பை உண்டாக்கி விட்டிருந்த மூன்றாவது பொதுத்தேர்தல் முடிந்து, ஆளும் கட்சியான காங்கிரஸ் ஆட்சி, அனைவரும் எதிர்பார்த்தபடி மகத்தான வெற்றி பெற்றிருக்கிறது. இந்த வெற்றி பாரதத் திருநாட்டில் வாழுகின்ற நாற்பது கோடி மக்களின் வெற்றி, ஜனநாயகத்தின் வெற்றி. ஆம்; தங்களை ஆளும் காங்கிரஸ் கட்சியின்பால் இந்தியப் பொதுமக்கள் வைத்துள்ள நல்லெண்ணத்தையும் நம்பிக்கையையும் உலகநாடுகள் அனைத்தும் உய்த்துணர மீண்டும் ஒரு வாய்ப்பு உண்டாகியிருக்கின்றது. இதன் மூலம், இந்தியாவின் பெருமை உலகநாடுகளின் மத்தியில் மென்மேலும் சிறந்து விளங்கும்!

ஏறத்தாழ நூற்றைம்பது ஆண்டுகாலமாக அடிமை வாழ்வு அகன்றிடாமல் வெள்ளையரின் ஆட்சிக்கு உட்பட்டுக்கிடந்த பாரததேசத்தை விடுதலை செய்ய மாபெரும் போராட்டம் நடந்தது! இந்த விடுதலை வேள்வியில் உடல், பொருள், ஆவி அனைத்தையுமே சர்வபரித்தியாகம் செய்ய வல்ல தேசத்தலைவர்கள் பலர் தோன்றினார்கள். மதிப்புக்குரிய அண்ணல் காந்தியடிகளின் மதிப்பிடற்கரிய தியாகப் பண்புகளால் உருவாகிப் பக்குவம் பெற்றார்கள் அத்தலைவர்கள், சுதந்திரப் போராட்டம் பல கட்டங்களில் உச்சநிலை எய்தி, இறுதியில் வெற்றி பெற்றது. நம் தாய்த்திருநாடு விடுதலை பெற்றது. நாம் விடுதலை பெற்றோம். இத்தகைய வரலாற்றுப் பெருமை கொண்ட-புனிதமிகு சரித்திரச் சிறப்பை உடைய காங்கிரஸ் மகா சபையின் வெற்றியில் பாரதமக்கள் அனைவருக்குமே பங்கு

உண்டு. ஒரு நாட்டின் முன்னேற்றம், வாழ்வு, வளப்பம் போன்ற பெருமைகள் அந்நாட்டினை முன்னின்று நடத்தும் தலைவரைப் பொறுத்தது. இந்த அளவில், நாம் பாக்கியசாலிகள். ஏனெனில், 'ஆசிய ஜோதி' யெனப் புகழப்படும் நேருஜியின் பொறுப்பு நிறைந்த தலைமை நமக்குக் கிடைத்திருக்கிறது. நாட்டுப்பற்று, நாட்டின் முன்னேற்றம், நாட்டுமக்களின் நல்வாழ்வு போன்றவற்றையே தம்முடைய தலையாய குறிக்கோள்களாகக் கைக்கொண்டு, அல்லும் பகலும் உழைத்துவரும் நேருஜியின் தவம் மூன்றும் முறையிலும் பலித்துவிட்டது. இது நம் பேறு அன்றோ!

டில்லி லோகசபையில் 353 இடங்களும் தமிழ்நாடு சட்டசபையில் 138 இடங்களும் காங்கிரஸுக்குக் கிடைத்துள்ளன இதே வெற்றிநிலை, இந்திய நாட்டின் ஏனைய மாநிலங்களிலும் ஏற்பட்டிருக்கிறது. இந்தியா முழுவதிலும் ராஜ்ய சட்டசபைக்குக் கிடைத்துள்ள இடங்கள் : 1768, "உலகநாடுகளிலேயே மிகப் பெரிதாக மதிக்கப்படும் இந்தியப் பொதுத்தேர்தல், உயிருள்ள ஜனநாயகத்திற்கு ஓர் எடுத்துக்காட்டு," என்று அமரிக்கத் தலைவரின் ஆலோசகரான திரு செஸ்டர் பவல்ஸ் கூறியிருப்பதை காங்கிரஸ் மகாசபை மெய்ப்பித்துக் காட்டிவிட்டது!

ஜனநாயக ஆட்சிமுறையில் கிடைத்த முதற் சாதனம் வாக்குரிமை. இவ்வுரிமைக்குச் சோதனையாக அமைவது தேர்தல். நாட்டில் நிலவுகின்ற பல்வேறு தரப்பட்ட, வெவ்வேறு மனப்பாங்கு பெற்ற கட்சிகள் போட்டியிடுவது மரபு, இம்மரபை ஒட்டி நடைபெறும் தேர்தலில் ஓட்டு வேட்டை நடத்த அந்தந்தக் கட்சியின் தலைவர்கள், அவரவர்களின் கொள்கை வழிப்படி சொல் மாரி பொழிவார்கள், எல்லாவற்றையும் செவிசாய்த்து, பின்னர் சிந்தித்துச் சுதந்திரமாகச் செயற்படக் கடமைப்பட்ட பொதுமக்கள், தங்கள் கடமைவழி நின்று,

தங்களுக்காக உண்மையான சேவை செய்த தலைவர்கள் யார் என்பதை நிதானமாக ஆராய்ந்து, அதன் பின்னரே, தங்களுடைய மதிப்பு வாய்ந்த வாக்குகளை அளிப்பார்கள், பொதுமக்களின் தனிப்பட்ட கருத்துக்களின் பொதுப்படையான பிரதிபலிப்பாக அமையும் வெற்றி-தோல்விகளின் மதிப்பீட்டின் வாயிலாகவே தேர்தலின் முடிவுகள் நிர்ணயிக்கப்படும். இது பொதுத் தேர்தல் பற்றிய ஒரு கணிப்பு.

இந்த முறை நடைபெற்ற பொதுத்தேர்தல் இந்தியத் துணைக் கண்டத்தை மட்டும் கவரவில்லை; அமரிக்கா, ருஷ்யா, பிரிட்டன், போன்ற நாடுகளின் கவனத்தையும் ஒருசேர ஈர்த்தது. இதற்குக் காரணங்கள் பலவுண்டு. ஆளும் கட்சியின்பால் அழுக்காறு பூண்டு அதைக் கவிழ்க்கச் சதிசெய்யும் நோக்கத்துடன் பழையதலைவர்கள் புதுவேஷங்கள் பூண்டு, புதிய கூட்டுக்கள் அமைத்துச் செயற்பட்டார்கள். இதன் விளைவாக, பொதுத்தேர்தலில் போட்டிகள் வலுப்பெறலாயின. பாரதப் பிரதமர் நேருஜி, பாதுகாப்பு அமைச்சர் கிருஷ்ணமேனன் ஆகியோருக்கு எதிரிடையாக லோகியாவும் ஆச்சாரியா கிருபளானியும் போட்டியிட்டார்கள். நேருஜியின் வெற்றி குறித்து நாற்பதுகோடி மக்களுக்கும் ஒரு நிரந்தரமான நல்ல நம்பிக்கை இருந்தது. ஆனால் அந்த அளவுக்கு திரு மேனனின் நிலையைக் கணிக்க முடியாமல் இருந்தது. முற்போக்குச் சக்திக்கும் பிற்போக்குச் சக்திக்கும் நடைபெற்ற போராட்டமாக அமைந்த இப்போட்டியில், வடக்குப் பம்பாய் மக்களின் வாக்குப்பாதுகாப்பினால், நம் பாதுகாப்பு மந்திரி மாபெரும் வெற்றிபெற்றுவிட்டார்.

நம் அருமைத் தமிழ்நாட்டிலும் சில தொகுதிகளில் இதே போட்டி நிலை நிலவியது. காந்திஜி போதித்த புறத்தூய்மையைப்போல அகத்தூய்மையையும் பெற்றிலங்கும் தமிழகத்தின் முதலமைச்சர் திரு காமராஜ்

அவர்களுக்குக் கடும் போட்டி இருந்தது. நேருஜியின் வெற்றியை நாட்டுமக்கள் முன்கூட்டியே நிர்ணயம் செய்தாற்போன்று, காமராஜ் அவர்களின் கெலிப்பு குறித்தும் ஏகமனதான அபிப்பிராயம் கொண்டிருந்தார்கள். அவ்வாறே, காமராஜ் அவர்கள் மகத்தான வெற்றி பெற்றுவிட்டார்கள், இது தமிழகத்தின் வெற்றி. 'உள்ளத்தில் ஒளி உண்டாளுல் வாக்கினிலே ஒளி உண்டாம்' என்ற வாக்குக்கு ஏற்றபடி, நாளெல்லாம்-தம் வாழ் நாளெல்லாம் நாட்டுமக்களைப் பற்றியே சிந்தித்து அரும்பணி இயற்றிவரும் காமராஜ் அவர்கள் இம்முறையும் வெற்றி பெற்ற சுபச் செய்தி, தமிழகத்திள் வருங்காலச் சிறப்புக்கும் வளப்பமான வாழ்வுக்கும் அமைந்துள்ள ஒரு சுப சகுனமாகவே உருவாகியுள்ளது என்பதை நாம் எண்ணிப் பெருமைப்பட வேண்டுமல்வா? பொதுநலத் துறைகளில், அஸ்திவாரக்கல் அமைத்து ஆரம்பித்து வைத்தும், திறப்பு விழா நடத்தித் துவக்கியும் வைத்த பெருமை, நமது மதிப்புக்குரிய முதலமைச்சரைப்போன்று, பாரதத்திலுள்ள பிறமாகாணத் தலைமை அமைச்சர்களுக்கு இருக்கமுடியாது, அந்த முறையில் பொதுமக்களுடன் இணைந்து தொண்டாற்றி, அசல் தொண்டராகவே மாறி விட்டிருக்கிருர், இத்தகைய தியாக சீலரை தமிழகம் பெற்றது பூர்வ புண்ணியமேயாகும்!

தி. மு. கழகம், இந்தத் தேர்தலில் தார்மீக அடிப் படையை மீறிய வழிகளில் சுவரொட்டிகள் அச்சடித்தும் அரசியல் நாகரிகம் கடந்த வகையில் 'அதிகப்பிரசங்கித் தனமாக'ப் பேசியும் எழுதியும் வந்தார்கள். குருடனுக்குக் குருடனே வழிகாட்டியாக அமைந்த கதையாக, திராவிட முன்னேற்றக் கழகத்திற்குக் கைகொடுக்க முனைந்த சுதந்திரக்கட்சியின் அதிபர் ராஜாஜி, கடைசியில் தம் கட்சி மண்ணைக் கவ்விய பரிதாப நிலையைக் கண்டு புலம்பும் கட்டத்தில் நிற்பதை நாம் காணுகிறோம்: அதுமட்டுமா? காஞ்சித்தலைவரின் 'மகத்தான தோல்வி'யையும் கண்டு விட்டோம்! தி. மு. கழகத் தலைவர் அண்ணாத்துரையின்

தோல்வி தி. மு. க. வின் தோல்வி என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. ஏனெனில், ஒரு தலைவரின் வெற்றி-தோல்விகள்தாம், அத்தலைவரைப் பின்பற்றுகிற மக்களுடைய மனங்களின் பிரதிபலிப்புகளாக அமைய முடியும், ஆகவே, தி. மு. கழகத்திடம் பொதுமக்களுக்குள்ள நல்லெண்ணம் சிதைந்து விட்டதென்பது தெள்ளத் தெளியப் புலனாகிவிட்டது. இத்தேர்தலில் அதிகப்படியான இடங்களைப் பிடித்துக்கொண்டதால் மட்டுமே அவர்கள் மார் தட்டிப் பேச வழியில்லாமல் போய்விட்டது. எதிர்க் கட்சியாக அமையும் இவர்கள் நாட்டுப் பிரிவினைக் கொள்கையுடையவர்கள்! முதலமைச்சர் ஐயப்படுகிற மாதிரி, எந்த அளவுக்குப் பொறுப்புடனும் பண்புடனும் இந்தப் 'புதுமுகங்கள்' செயலில் இறங்கப் போகிறார்களோ?

காந்திஜி ஒருமுறை குறிப்பிட்டார், "நான் ராஜரிஷி வேடம் புனைந்து கொண்டு ராஜதந்திரியாக உலவ ஒரு போதும் இணங்கேன்!" என்று. காந்திஜியின் பேரைச் சொல்லி, புதுப் புனைவடிவம் பெற்று உலவித் திரியும் முதுபெருங்கிழவர் ராஜாஜி சத்தியத்தைச் சோதிக்கத் தலைப்பட்டார். கடைசியில் சத்தியமே அவரைச் சோதித்து விட்டது. சத்தியத்தின் வடிவமாக அமைந்த பொதுமக்கள் ராஜாஜியை மண்ணைக் கவ்வச் செய்து விட்டார்கள். புறத் தூய்மையோ அகத்தூய்மையோ கடுகளவும் இல்லாதவர் ராஜாஜி என்பது அவரது கொள்கை மாற்றத்திலிருந்து புரிந்தது. இவ்வுண்மையை தற்சமயம் நன்கு புரிந்து கொண்டு விட்டார்கள் நாட்டு ஜனங்கள். பதவியிலிருக்கையில் ஒரு பேச்சும், பதவி போனவுடன் ஒரு பேச்சுமாகப் பேசி, 'அரசியல் கோமாளியாகவே ஆகி விட்ட ராஜாஜியின் முதற்தோல்விக்கு பிள்ளையார் சுழி யிட்டார் பேராசிரியர் ரங்கா. ஆளும் காங்கிரஸாருக்கு மட்டும் ஓட்டுப் போடாதீர்கள். வேறு யாருக்கு வேண்டுமானாலும் போடுங்கள்!" என்று தம் கைப்பட எழுதி வெளியிட்டு நாடகமாடிய சுதந்திரக் கட்சியின்

கதாநாயகன் இனிமேல் 'பவுடர்' பூசிக்கொள்ளும் வாய்ப்பே பெறாத அளவுக்குப் படுதோல்வி கண்டுவிட்டார் பாவம்!... இவரது அரசியல் சூட்சியின் வெறி உச்சக் கட்டத்தை அடையாதிருந்தால், தி. மு. கவுக்கு 'முஸ்லீம் லீக்'கின் இணைப்போ, அல்லது, இந்த அளவு இடங்களோ கட்டாயம் கிட்டியிருக்கவே முடியாது! "சென்னை நகரம் சுதந்திராக் கட்சியைக் கைவிட்டுவிட்டது! பெரும் பாலான அபேட்சகர்கள் ஜாமீன் தொகையை இழந்துள் ளனர்! சுதந்திராக் கட்சிக்குப் படுதோல்வி ஏற்பட்டுள்ள தென்பதை ஒப்புக்கொள்கிறேன்!" என்று ராஜாஜியே கூறிவிட்டார், செல்லாக்காசு அதற் குறிய-அதற்குகந்த இடத்தை அடைந்து விட்டது!

கம்யூனிஸ்ட் கரைந்து தேய்ந்துவிட்டது! பி. சோ. முதலிய கட்சிகளின் நிலையும் சென்ற தேர்தலைவிட வருந்தத்தக்கதாகி விட்டது! புதிதாகத் தோன்றிய தமிழ்த் தேசியக் கட்சி பாவம், பலர் ஆதரித்தும்கூட, பொதுமக்கள் கண்களில் பட்டதாகவே தெரியவில்லை!

ஆம்: தேசிய விழிப்புப் பெற்ற பாரதம் சத்திய சோதனையில் வாகைமாலை புனைந்து வெற்றி முரசம் கொட்டி நிற்கிறது. இவ்வெற்றிக்குப்பெருந்துணை நின்ற பெருமை, வாக்காளப் பெருமக்களையே சார்ந்தது. குடு குடு கிழவிகளும் முதியவர்களும் தங்களது கடமையுணர்ந்து மாட்டுச் சின்னத்தில் முத்திரை பொறித்த நிகழ்ச்சிகளை நாட்டின் பல பகுதிகள் கண்டன. ஆளுங்கட்சிக்கு எதிராக வாக்குக் கேட்டவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்த பெண் குலத்தின் தேசப்பற்றினையும் நாடு கண்டது.

கல்வி, தொழில், வாழ்வு, ஆராய்ச்சி, பாதுகாப்பு போன்ற சகல துறைகளிலும் முன்னேறி வருகிறது நம் ஆட்சி, இம்முன்னேற்றமோ, இங்கு நிலவும் அமைதியோ

நம்முடன் விடுதலை பெற்ற ஏனைய நாடு களிலே இல்லை அதற்குமாறாக, அங்கங்கே ராணுவ ஆட்சிகள் அச்சுறுத்தி வருவதையும் நாம் பார்க்கிறோம். "நான் பெறுவதற்கு பாடுபடுகிற இந்தியா ஏழையிலும் ஏழையரும் இந்நாடு தங்களுடையது என்று உணரத்தக்க ஒரு இந்தியாவாக இருக்கும்," என்று கூறிய அண்ணலின் வாக்கு படிப் படியாகப் பலிதமடைந்து வருகிறது.

காங்கிரஸ் ஆட்சியின் பத்தாண்டுச் சாதனைகளின் பணி அறிந்து, அப்பணியில் நம்பிக்கை வைத்து வாழ்த்துக்கூறி, ஒன்றுபட்ட தேசிய இன உணர்ச்சி யுடன் தங்களது உயரிய வாக்குகளை அளித்த பொது மக்கள் அனைவருக்கும் நன்றி கூறுகிறோம். வெற்றிமுகம் காட்டிய காங்கிரஸ் வேட்பாளர்கள் எல்லோருக்கும் நல் வாழ்த்துக் கூறுகின்றோம். அமையவிருக்கின்ற காங்கிரஸ் கட்சியின் புதிய அமைச்சரவையை ஆர்வத் துடன் வரவேக்கக் காத்திருக்கிறோம்.

வாழ்க நேருஜி! வாழ்க காமராஜ்! வாழ்க நம் பாரதத் தலைவர்கள்!

- 1962 தேர்தல்
- முடிந்த நேரம்
- பிரிவினை சக்திகளைச்
- சாடி நேருஜி பேசிய
- பேச்சு மறக்க
- முடியாதது ஆகும்.
- தி. மு. கழகம்
- இன்று திராவிட
- நாட்டுக் கோரிக்கை
- எனும் பிரிவினைக்
- கொள்கையைத்
- திட்டங்களிலிருந்து
- பிரித்து விட்டதாகச்
- செப்பிவருகிறது.
- நேருஜியின் எச்சரிக்கை
- சம்பந்தப்பட்டவர்கட்கு
- கசக்கவே செய்யும்
- ஆம்; உண்மை
- என்றைக்குத்தான்
- இனித்திருக்கிறது?...

# அன்று காந்திஜி எச்சரித்தார்!
# இன்று நேருஜி எச்சரிக்கிறார்!

# அன்று காந்திஜி எச்சரித்தார்! இன்று நேருஜி எச்சரிக்கிறார்!

அண்மையில் நடந்த பாராளுமன்றக் கூட்டுக் கூட்டத்தின் போது, குடியரசுத் தலைவரின் உரைமீது சபையில் நடந்த விவாதத்திற்குப் பதிலளித்துப் பேசிய பாரதப் பிரதமர் நேருஜி, பொது மக்களின் கவனத்தைக் கவரும் வகையில் அற்புதமான கருத்துக்கள் பலவற்றைத் தெளிவுபடுத்தினார். அவரது உரையில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் பிரிவினைக் கொள்கையை முழு மூச்சோடு எதிர்த்துப் பேசிய பேச்சு, மிகவும் குறிப்பிடத் தக்கதாக அமைந்திருக்கிறது. "இந்தியாவிலிருந்து பிரிந்து தனிநாடு கேட்கிறது தி. மு. கழகம். இந்தக் கோரிக்கை, அடிப்படையிலேயே தவறானதாகும். ஒவ்வொரு இந்தியரும் இக்கோரிக்கையை மிகத் தீவிரமாக எதிர்க்க வேண்டும்," என்று உரை நிகழ்த்திக் கொண்டிருந்த தலைமை அமைச்சர், பின்னர் தம் குரலை உயர்த்தி அழுத்தம் பதித்துப் பேசியதாவது: "... ஏற்றுக் கொள்ள முடியாத சில கோரிக்கைகளும் நாட்டில் உண்டு. போர் என்றால் போர்தான். ஆனால், போரை நாம் ஒருபோதும் ஏற்கமுடியாது. தி. மு. கழகத்தவருக்கு வேறு சில கட்சிகள் துணையாக நின்று ஆதரவு கொடுப்பது தீவினைப் பயனாகும்; தீவினை பயப்பதுமாகும். தேர்தல் காலத்தில் தலைவிரித்தாடிய ஜாதி வெறி, வகுப்புவாதம் போன்ற தீயபண்புகளைத் தூண்டிவிட்ட குறுகிய புத்தியைக் கொண்ட இக் கட்சிகளின் மனப் பான்மையைத் தடுத்து நிறுத்தாமல் விட்டுவிடுவோமானால், நாட்டின் ஐக்கியம் பாழ்பட்டுப்போக நேரிடும். எனவே, இம்மாதிரியான தீயகொடுமைச் சக்திகளை எதிர்த்துப் போராடவேண்டும்!"

ஆம்; உணர்ச்சி மிகுந்த பேச்சு இது!

கட்சி என்ருல், அதற்கெனத் தனித்தன்மை கொண்ட திட்டவட்டமான சில கொள்கைகள் இருந்தாக வேண்டும். அத்தகைய உட் கருத்துக்களை நிலையான மனப் பக்குவத்தோடு, நியாயமான முறையில் உருவாக்கத்தக்க தலைவர்கள் அந்தந்தக் கட்சிக்குக் கிட்டவேண்டும். இவ்விதமான பொதுக்கருத்தை மாற்றிவிட்டார் திரு சி. என். அண்ணுத்துரை. அவர் கொண்டிருக்கும் வலுவிழந்த கருத்துக்களுக்கு ஏற்றவகையில்தான் அவரது கட்சியும் இயங்கி வருகிறது. தெளிந்த இதயத்தில்தான் தெளிவான எண்ணங்கள் பிறக்க முடியும். தெளிவான எண்ணங்கள்தாம் நாட்டையும் நாட்டு மக்களையும் நல்வழிப்படுத்த முடியும். ஆனுல் தி. மு. கழகத்தையோ, அதன் தலைவரையோ நம் கருத்திற் கொணர்ந்து பார்த்தால், அவரை நம்பியுள்ள பரிதாபத்துக்குரிய ஆயிரக் கணக்கான நம் நாட்டுச் சகோதரர்கள்தாம் நம் ஆழ்ந்த அனுதாபத்துக்கு இலக்காகின்ருர்கள்.

தேர்தலில் தி. மு. கழகம் நாட்டுப் பிரிவினையை அடித்தளமாக் கொண்டு இயங்கவில்லை. அவ்வாறு இருந்திருந்தால், அவர்களுக்குக் கிடைத்த தொடர்போ, அல்லது இணைப்போ சுமுகமான முறையில் ஏற்பட்டிருக்க முடியாது! தேர்தலில் பண்புகெட்ட வழிகளில் சுவரொட்டிகளை ஒட்டியும், ரூபாய்க்கு மூன்றுபடி அரிசி ஐந்து ஏக்கர் நிலம் போன்ற தவருன கணைகளைக் கொண்டு அப்பாவி மக்கள் நெஞ்சைத் தம் வசப் படுத்தியும் ஏதோ ஓர் அளவுக்கு, சென்ற தேர்தலைக் காட்டிலும் இம்முறை கூடுதலான இடங்களைப் பிடித்து விட்டார்கள். சந்தர்ப்பங்கள் சிலரை வாழவைப்பது உண்டல்லவா? அவ்வகையில்தான், இவர்களுக்கு இப்போது ஒரு திருப்பம் ஏற்பட்டிருக்கிறதே தவிர,

வேறு எந்தச் சிறப்பும் மறைந்திருப்பதாக எண்ண மார்க்கம் இல்லை! "இருபது லட்சம் பேர்கள் எங்களுக்கு வோட்டு போட்டிருக்கிறார்கள். இந்த இருபது லட்சம் மக்களும் எங்களது திராவிட நாட்டுக் கொள்கைக் காகவேதான் ஓட்டு போட்டிருக்கிறார்கள்!" என்று துணிந்து பச்சைப் பொய் ஒன்றைத் திரித்து விட்டிருக்கிறார் மாஜி எம். எல். ஏ. தலைவர்! "மேல் சபைக்கு நான் நிற்க ஒப்பவில்லை. இன்னும் ஐந்து ஆண்டுகளில் காஞ்சி மக்களைத் திருப்திப் படுத்தும் வண்ணம் நல்ல முறையில் சேவை செய்வதே என் கடமையாகும்." என்று அழகாக நீலிக்கண்ணீர் வடித்த தலைவரின் ஒப்பாரியை வெட்ட வெளிச்சமாக்கிவிட்டது, அவருக்குக் கிட்டியுள்ள ராஜ்யசபைப் புதுப் பதவி!

மாபெரும் தோல்வியில் மறைந்திருக்கும் புது வெற்றியிலே திரு அண்ணாத்துரை கண்மூடித் திளைத் திருக்கும் நேரமாயிற்றே இது! ஆகவேதான், அவர் நேருஜிக்குப் பதில் சொல்லவும் முனைந்து விட்டார் போலும்! "சிவப்புத் துணியைக் கண்டு மிரண்டு கோபமடையும் காளையைப்போல, பிரிவினைக் கொள்கையைக் கண்டு நேரு ஆத்திரப்படுகிறார்!" என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு சிலரைத் தவிர ஏனையப் பொதுமக்கள் எல்லோரும் இப்போது அறிஞரையும் அவரது பச்சோந்திப் பேச்சுக்களையும் எடைபோட்டு, எண்ணிப் பார்க்கத் தலைப்பட்டு விட்டார்கள். ஆகவே, தி. மு. கழகம் செப்பிடு வித்தை காட்டிவரும் இந்தத் "திராவிட நாடு" என்பது இன்றல்ல, என்றுமே உருவாக்க முடியாத ஒன்றாகும்! இப்பொழுது கிடைத்துள்ள அதிகப்படியான இடங்களை வைத்துப் பேசிப் பொதுமக்களை இன்னும் ஏமாற்றும் வழிகளில் இவர்கள் இறங்கி வருகிறார்கள். அடுத்த தேர்தலில் தி. மு. க. தான் ஆளப்போகிறதாம்!-

சொல்மாரி பொழிந்து வருகிறார்கள் தம்பிமார்களும் புது முகங்களும்! பாவம், பரிதாபத்துக்குரியவர்கள்! இப்போது கிடைத்துள்ள பதவியின் மூலம், இந்த ஐந்தாண்டுகளிலே டில்லிக்குப் பறந்து திரும்புவதுடன் பெருமைப்பட்டுக் கொள்ளாமல், தம்முடைய பிரிவினைக் கொள்கையில் திரு அண்ணாத்துரைக்கு மெய்யாகவே ஒரே ஒரு முறையேனும் இவர் 'திருவாய்' மலர்ந்து, தம் பிரிவினைக் கொள்கையைத் தர்க்க ரீதியான அரசியல் அடிப்படையுடன் பேசத் தெம்பு பெறுவாரா? ஊஹூம், ஒருகாலும் இந்நிகழ்ச்சி இந்த ஐந்தாண்டுக்குள் ஏற்படச் சாத்தியமே இல்லை!

எங்களுடைய இந்தக் கூற்றுக்கு ஒரே ஒரு அத்தாட்சியை மட்டும் எடுத்துக்காட்ட விழைகிறோம். சென்ற மாதத்தின் மத்தியில் எஸ். ஐ. ஏ. ஏ. மைதானத்தில் திரு அண்ணாத்துரை பேசுகையில், திராவிட நாடு கோரிக்கையை நாலணாவுக்கு ஒப்பிட்டுப் பேசினார். "நாலணா கேட்டால்தான், ரொம்ப நேரமாகக் கேட்கிறானே. இரண்டணாவாவது கொடுப்போம் என்று மனம் மாறுவார்கள் சிலர். அதே போன்று, திராவிட நாடு கேட்டால்தான், கடைசியில் தமிழ்நாடாவது கிடைக்கும்," என்று தி. மு. க. மூலர் பிரசங்கம் செய்தார். தம் பேச்சைப் பத்திரிகைகளில் படித்ததும், அவருக்கே தன் சுயரூபம் வெளிப்பட்டுவிட்டதில், அசடுவழியத் தொடங்கிவிட்டிருக்க வேண்டும். உடனே ஓர் அறிக்கையை வெளியிட்டுவிட்டார். "என் பேச்சுக்கு வேண்டுமென்றே சிலர் வேறு அர்த்தம் கொடுத்துத் திரித்து வெளியிடுகிறார்கள்!" என்று புலம்பி முடித்தார் அவர். இந்த ஒரு பேச்சே போதும், தி. மு. க. வின் ஏமாற்று வித்தையை மெய்ப்பிக்க!

அகில உலகப் புகழ் படைத்த ஒப்பற்ற தலைவர் நேருஜி எங்கே?

மெரினா புகழ் காணும் இந்த தி. மு. க. தலைவர் எங்கே?

**"இந்தியாவைத் துண்டாட விரும்புபவன் நாட்டின் துரோகி யாவான்!"** என்று அழுத்தம் திருத்தமாகப் பேசிவந்த அண்ணல் காந்தி அடிகளின் ஒன்றுபட்ட தேசிய இன உணர்ச்சியின் தத்துவத்தையும் குறிக்கோளையும் பொதுமக்கள் ஒருபோதும் மறக்கமாட்டார்கள் என்பதும் உறுதி!

- ராஜன் பாபு
- அவர்களின்
- பொது வாழ்வு
- அரசியல்
- ரீதியாகவும்
- அறிவு ரீதியாகவும்
- சரித்திர சிறப்பு
- வாய்ந்தது
- மனிதருள் மனிதர்
- அவர் இறவாப் புகழ்
- கொண்டவர் அவர்!

# முதல் குடியரசுத் தலைவரின் கடைசிப் பேருரை

# முதல் குடியரசுத் தலைவரின் கடைசிப் பேருரை

'ஹரிஜன்' பத்திரிகையில் ஒரு சமயம் மகாத்மா காந்தி அடிகள் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்:

"...உங்களிலே சிலர் 'காந்தி பக்தர்' என்று சொல்லப்படுகிறார்கள்; அந்தப் பெயர் பிரயோசனமில்லை. அதைவிட, 'அகிம்சா பக்தர்' என்று சொன்னால் என்ன? ஏனென்றால், காந்தி என்பவரிடம் நன்மையும் தீமையும், பலமும் பலவீனமும், அகிம்சையும் இம்சையும் கலந்தே காணப்படுகின்றன. ஆனால், அகிம்சையோ எந்தவிதக் கலப்பும் அற்ற தூயவடிவமாகும்!..."

முதலில் தன்னை உணர்ந்து புரிந்து கொண்டு, அப்பால் உலகத்தவர்க்குத் தன்னை உணர்த்திப் புரிய வைக்கும் பரிபக்குவ நிலை கைவரப் பெற்றவனே ஞானியென மதிக்கப்படுகிறான். இவ்வகைப்பட்ட ஞானிகளுக்கெல்லாம் ஞானியாக நம்மிடையே வாழ்ந்த-வாழ்ந்து காட்டிய தவயோக ஞானியான அண்ணலின் மேற்கண்ட அகிம்சைத் தத்துவம் பொன்னெழுத்துக்களிலே வடிவம் பெற்றுள்ள மூதுரையாகும். இம்முதிய மொழியான அகிம்சைத் தத்துவ நெறியில் காலூன்றி நின்று-நிலைத்து-பண்பட்ட பேரறிஞர்களுள் டாக்டர் ராஜேந்திர பிரசாத் அவர்கள் குறிப்பிடத் தகுந்தவர் ஆவார். "பூரண ஞானம் பொலிந்த நன்னாடு" என்று பாடிய பாரதியின் கவிக்குரலுக்கு வாய்த்த எதிரொலிபோல விளங்கும் டாக்டர் பிரசாத் அவர்கள், இந்தியக் குடியரசின் முதற் தலைவராக கடந்த பத்தாண்டு காலத்

திற்கும் மேலாக நம்மிடையே விளங்கி, தமக்கும் தம் தாய்த்திரு நாட்டுக்கும் பெருமை தேடிக்கொண்ட பான்மைமிகு சரித்திரத்தை வரலாறு என்றென்றும் நினைவிற்கொள்ளும்!

தம்முடைய பதவிக்காலம் நிறைவெய்தி, விடை பெற்றபோது, புதுப் பார்லிமெண்டைத் துவக்கி வைத்துப் பேசிய ஜனாதிபதியின் கடைசிப் பேருரை உலக அரங்கத்தின் கவனத்தைக் கவர்ந்தது.

" நாட்டிலே ஜனநாயக சோஷலிஸ சமுதாயத்தை நிறுவ திறம்பட நடவடிக்கைகள் எடுத்து, உறுதியான கொள்கைகளைக் கடைப் பிடிப்பதே இந்தியக் குடியரசின் உயிர்ப்பான நோக்கமும் லட்சியமும் ஆகும்; இதன் மூலம்தான் நாடு முன்னேறி, பாரத மக்கள் எல்லோருக்கும் வேலை வாய்ப்பு ஏற்பட்டு, உற்பத்தி பெருகி, சமூகநீதி நிலைக்க முடியும்!..."

புதிய பாராளுமன்றத்தின் இணைப்புக் கூட்டத்தில் இவ்வாறு தம்முடைய அழகிய உரையைத் தொடங்கி, அதன்பின் இன்றையப் பிரச்சினைகள் குறித்தும் நம் சிந்தனையைத் தூண்டும் வகையில் அற்புதமான கருத்துக்கள் சிலவற்றையும் எடுத்துரைத்தார்.

நாட்டின் முதல்வரது மொழியாற்றலைப் போற்று வதற்கு முன்னதாக, இன்றைய உலகச் சூழலையும் நாம் மறந்து விடலாகாது. காங்கோ, பெர்லின், லாவோஸ், அல்ஜீரியா போன்ற பிரச்சினைக்குரிய பகுதிகளின் பிரச்சினைகள், கொந்தளிப்பு அடங்கிய நிலையில் இருந்து வருவதை நாம் காண்கிறோம். உலகப் பெரும் போரைத் தடுத்து நிறுத்தும் பணியில், ஜெனிவா படைபலக் குறைப்பு மாநாட்டின் பலன் எதிர்பார்த்த அளவுக்கு அமையவில்லை.

நம் பாரதத்தின் இன்றைய நிலையையும் நாம் எண்ண வேண்டுமல்லவா? அண்டை நாடான பாகிஸ்தானம் வேளைக்கொரு பேச்சும், நாளுக்கு ஒரு வேஷமுமாகக் கூத்து நடத்திவருகிறது. காஷ்மீர் சீனு சிக்கல்கள் வேறு. இவை நீங்கிய ஏனைய சின்னஞ்சிறு உள் நாட்டுக் குழப்பங்களும் நமக்குத் தலைவேதனையைத் தராமல் தப்பவில்லை, இவை எல்லாவற்றையும் நெஞ்சில் இருத்தித்தான் தமது பேச்சை ஆரம்பித்து முடித்திருக்கின்றுர் ராஜேந்திர பிரசாத்.

வெளிநாட்டு விவகாரங்களைப்பற்றிக் குறிப்பிடுகையில், அணு குண்டு உற்பத்தி, படைக்கலப் பெருக்கம் போன்ற முனைப்புச் சக்திகளைத் தடுப்பதற்கான வழிவகைகளிலே அமைதி நிலவச் செய்யும் வண்ணம் பாரதம் அதன் செல்வாக்கைப் பயன்படுத்தி, தன்னுல் இயன்ற தீவிரமான முயற்சிகளை மேற்கொள்ளும் என்றும் குடியரசுத் தலைவர் வலியுறுத்தினுர்.

“ஜனநாயக சோஷலிஸ சமுதாயத்தை இந்நாட்டில் அமைப்பதற்குச் சரியான குறிக்கோள்களை பாரதம் அனுசரித்துக் கடைப்பிடிக்கும். இந்த லட்சியத்தை அடைவதற்கு உறுதியான கொள்கைகளைப் பின்பற்றுவதே அரசாங்கத்தின் நோக்கமும் கவலையுமாக இருக்கும். இவைகளை நிறைவேற்றி, எல்லா மக்களும் சமமான வாழ்க்கை வசதிகளுடன் வாழ வழி செய்யும் நம் காங்கிரஸ் ஆட்சி எனவே, சமுதாய நீதியும் காலக் கிரமத்தில் பண்பட்டுத் தழைக்கத் தொடங்கும் என்பதும் நிச்சயம்!...” என்றும் அவர் குறிப்பிட்டார்.

தேசிய விழிப்புப் பெற்ற மக்களிடையே சகோதர உணர்வுடன் கூடிய ஒன்றுபட்ட உள்ளப்பிணைப்பு இரண்டறக் கலந்து உறவாட வேண்டிய அவசியம் பற்றி திரு. பிரசாத் அவர்கள் அடிக்கடி நினைவூட்டிய

தன்மையில், நாட்டுப் பிரிவினைக் கிளர்ச்சியைத் தூண்டும் கூட்டத்தவரை எச்சரித்த மனப்பாங்கு இருப்பதை யார்தாம் உணராமல் இருப்பார்கள்? ஏழை எளியவர்களுக்கு நன்மை செய்வதே தங்கள் கனவு என்று தம்பட்டம் அடித்துவரும் சுதந்திரக் கட்சியைச் சாடும் முறையில், திரு. பிரசாத் அவர்கள் உரை நிகழ்த்துகையில் ஏழை மக்களின் நலனில் முதல் அக்கறை செலுத்தி வருவது நம் காங்கிரஸ் ஸ்தாபனம் என்பதையும் திட்ட வட்டமாகச் சொல்லிவிட்டிருக்கிறார், ராஷ்டிரபதி.

எவ்வகையில் பார்த்தாலும், சிறப்புத்தன்மை கொண்டதாக அமைந்து விட்டது, பாரதத்தலைவரின் பேருரை.

'சிறந்த தேசபக்தர், நுண்ணிய சிந்தனைவாதி, நல்ல கர்மவீரர், உண்மையான காந்தி பக்தர்' என்று புகழ்ந்து கொண்டே இருக்கும் நேருஜியின் பேரன்புக்கும் பெருமதிப்புக்கும் காரணமாகி ஒளிவிளக்காகத் திகழும் திரு. ராஜன்பாபு அவர்களின் பேரையும் புகழையும் பணியையும் நினைவில் வைத்து அஞ்சலி செய்வது நம் நாட்டு மக்களின் கடமையாகும்.

- பாரதத்தின்
- இரண்டாவது ஜனாதிபதி
- இந்தப் பாரத ரத்தினம்,
- சிந்தனைத்திறன்,
- மெஞ்ஞானப் பற்று,
- பேச்சுவன்மை,
- போன்ற
- நற்சிறப்புக்களால்
- ஆசியாவை
- அழகுபடுத்தும்
- மாமேதையான
- இந்த டாக்டர்,
- உலகப் பேரறிஞர்களுள்
- குறிக்கத்தக்கவர்!...

# இரண்டாவது டாக்டர்

# இரண்டாவது டாக்டர்

இங்கிலாந்து நாட்டின் அரசியார் எலிசபெத் அவர்கள் டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்களுக்கு அண்மையில் கடிதமொன்றை அனுப்பினர், ருஷ்ய நாட்டின் தலைமை அமைச்சர் குருச்சாவ் அவர்களும், அமெரிக்கக் குடியரசுத் தலைவர் திரு கென்னடியும் தனித் தனியே டாக்டருக்குக் கடிதங்கள் எழுதினர்கள். உலகத்தின் வல்லரசுச் சக்திகளிடமிருந்தெல்லாம் ஒரே சமயத்தில் அறிஞர் எஸ். இராதாகிருஷ்ணன் அவர்களுக்குக் கடிதங்கள் வருவதென்றல், இந்நிகழ்ச்சி பெருமைக்குரிய செயலே அல்லவா? இத்தகைய பெருமைக்குரிய செயல் மூலம் தாங்கள் உயர்ந்து, உலக மேடையில் உயர்ந்து நிற்கும் தத்துவஞானியை மேலும் உயர்த்திப் பாராட்டிப் புகழ்ந்துரைத்து வாழ்த்துச் செய்திகள் அனுப்பிவைத்தார்கள் உலகத் தலைவர்கள்.

ஆம்; இப்படிப்பட்ட மங்களகரமான மங்கல ஒலிகளுக்கு மத்தியில்தான், நாம் நம்முடைய தெய்வத் தமிழகத்தினைச் சார்ந்த இராதா கிருஷ்ணன் அவர்களை இந்தியத் துணைக்கண்டத்தின் இரண்டாவது குடியரசுத் தலைவராகப் பெறும் பேறு பெற்றிருக்கின்றேம். தமிழ் நாட்டின் பெருமையை உலகமெனும் கலங்கரை வழியே திக்கெட்டும் பரப்பும் வகையில், இதோ, இந்த இரண்டாவது டாக்டர் நமக்குக் கிடைத்திருக்கிருர்!

சரித்திரத்தை மனிதன் எழுதுகிருன்.

அதேபோல, மனிதனைச் சரித்திரம் எழுதுகிறது.

சரித்திரமும் மனிதனும் உள்ளடங்கியதோர் ஆன்மீகத்தின் வடிவம் இன்றையக் குடியரசுத் தலைவர். முன்னையத் தலைவருக்குத் துணை நின்ற பத்து ஆண்டுப் பழக்கம் இப்பொழுதும் இவருக்குத் துணை நிற்கும். ஆசிரியர் ஒருவர் இப்பொழுது ஜனாதிபதி. தென்னகம் ஈன்ற குடிமகனது தத்துவச் சிந்தனை நயங்களைத் தொடர்ச்சியாகக் கேட்க மேலை நாடுகளிலே போட்டி, போட்டியும் பூசலும் மண்டிக்கிடக்கின்ற அரசியல் சகதியில் கால் பாவாமல், தேசீயப்பற்றும் ஒன்றுபட்ட ஐக்கிய உணர்ச்சியும் நெஞ்சில் காலூன்றி நின்ற நிலையிலே, டாக்டர் அவர்களைச் சுற்றி அடி நாட்கள் சுழன்றன. ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகம் தொட்டு, காசிப் பல்கலைக் கழகம் வரையிலும், வரையிலாப் பணி இயற்றி மாமேதையாக விளங்கிய இவர், இன்று பண்பட்டுப் பக்குவம் பெற்ற தலைவராக அமைந்து – பண்பாட்டுப் பெருமையையும் நாட்டின் வளப்பத்தையும் நிலை நாட்டிச் செழிக்கச் செய்ய வல்ல ஓர் ஒப்பற்ற தந்தையாக அமர்ந்து, ஜனாதிபதிப் பீடத்தில் இருக்கை கொண்டுள்ள இவரை இதயம் ஒன்றிய பாசத்துடனும் பற்றுதலுடனும் வரவேற்றுக் கைகூப்பித் தொழுகின்றோம்.

"குண நலம், சான்றோர் நலனே!" என்கிறது தெய்வத் தமிழ்மறை, இக்குண நலம் தழுவிய சான்றோர் திலகம் டாக்டர் ராதாகிருஷ்ணன். அன்னாரது தூய நெஞ்சத்தை பிரியாவிடை பெற்றுச் சென்ற பாபு இராஜேந்திரபிரசாத்தைப் பற்றிப் புகழ்ந்துரைத்த பான்மை நமக்கு எடுத்தோதுகிறதல்லவா?

"தேசத் தொண்டு என்பதே மனித சமுதாயத்தின் தொண்டு என்பதே என் கருத்தாகும்," என்பது காந்திஜியின் தத்துவம். இத்தத்துவம், மெஞ்ஞான மேதைக்கு மிகப் பொருந்தும்.

"மெய்ஞ்ஞானத்தின் இலட்சனம் என்ன வென்ருல், தன்னல மின்மையும் நாணயமுமே!"- அறிவாளி ரஸ்கினின் குறிக்கோள் இன்று செயற்பட்டு விட்டது. மாதந்தோறும் பத்தாயிரம் ரூபாய் சம்பளம் பெறவேண்டியவர், வரி முதலியன கழித்து ரூ 1,900 தான் பெறத் தீர்மானித்திருக்கிருர், ஜனநாயக நாட்டின் முதல்வர் என்ருல், அவரே மக்களின் சார்பாளர் வரிசையிலும் முதல்வர் அல்லவா? இவ்வகையிலும், அவரது கடமை நாட்டம் புலனுகிறது. காட்சிக்கு எளியவராக நின்று, பொதுமக்களுடன் நேரிடைத் தொடர்பு கொள்ளும் வகையில் பேட்டிக்கான வழிவகைகளேயும் வகுத்துள்ளார். சென்ற வாரத்தில் குடியரசு மாளிகையில் மூவாயிரம், நாலாயிரம் பேர் தலைவரைக் கண்டு பேசியிருக்கின்றனர்! "உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாயின், வாக்கினிலே ஒளியுண்டாகும்." என்கிற பாரதி வாக்கை மெய்ப்படுத்த இதைவிட வேறென்ன திருட்டாந்தம் வேண்டும்?

"தலைசிறந்த அரசியல் மேதையும், பண்பாட்டுத் தலைவருமான தாங்கள் இந்தியக் குடியரசின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது அறிந்து பெருமகிழ்வு அடைகிறேன். நாட்டின் சேவையில் வாழ்நாள் முழுவதையும் ஈடுபடுத்தியிருக்கும் தங்களுக்கு இந்த உயர்ந்த பதவி கிடைத்திருப்பது மிகவும் பொருத்தமானது ஆகும்," என்று திரு கென்னடியின் வாழ்த்துத் தந்தி கூறுகிறது.

குடியரசுத்தலைவருக்குத் துணைநிற்க டாக்டர் ஜாகிர் உசையின் அவர்கள் கிடைத்திருக்கிருர். அனுபவ வழிகளில் அன்பைத் துணைகொண்டு வாழ்வின் தடத்தில் நடந்து முன்னேறிய மக்கள் தலைவர் அவர். "மனிதர்கள் யாவரும் ஒரே சகோதரத்வ சமுதாயத்தினரே!" என்னும் 'திருக்குர் ஆன்' வாசகத்துக்கு இணங்கும் வண்ணம், துணைத் தலைவரின் பதவி கைகூடி வந்திருக்கிறது.

தமிழ்மண்ணுக்கு உடைத்தவரான புதிய குடியரசுத் தலைவருக்கு தமிழகத்திலிருந்து கோயில் பிரசாதம், ஏலக்காய் மாலை, பூமாலை முதலியன அனுப்பப்பட்டன. ஆம்: பொருத்தமுடைய நடப்பேயாகும்! டாக்டர் அவர்கள் பூவின் மணமாகப் புகழ் நிறுவி, ஏலக்காய் வாசனை போன்று ஆரோக்கியமான நல்ல வாசனையைத் திக்கெட்டும் பரப்பி, பெருமையும் பெருமிதமும் கொண் டிலங்க வேண்டு மென்பதே நம் பிரார்த்தனையாகும்!

○ பால்வாய்ப் பசுந்தமிழ்!
○ இப்போது
○ போதனுமொழியாக
○ இலங்கி வருகிறது.
○ இக்கனவு
○ முற்றுப்
○ பெறுவதற்குள்
○ இடைமறித்த
○ தொல்லைகள்
○ ஒன்று, இரண்டா!

# தமிழே போதனுமொழி

# தமிழே போதனுமொழி

அகில உலகப் பேரொளியாக விளங்கிய காந்தி யடிகள், தம் ஆயுட் காலத்தில் மணிமணியான பொன் மொழிகள் பலவற்றை அவ்வப்போது பொதுமக்கள் முன்னே வைத்திருக்கின்றார். அவை எக்காலத்துக்கும் ஏற்ப அமைந்த பொற்புக் கொண்டவை. தாய்மொழியின் வல்லமை குறித்தும், அன்னைமொழியின் இன்றியமையாத் தன்மை பற்றியும் ஒரு திட்டவட்டமான முடிவை அவை எடுத்துக் காட்டுகின்றன. அவற்றில் ஒன்றிரண்டு வாசகங்களை இப்போது நாம் மீண்டும் எண்ணிப் பார்க்க வேண்டும். அண்ணல் காந்திஜி கூறுகின்றார்.

> "சத்தியத்தையும் அஹிம்சையும் பலி கொடுத்து விட்டு, அதனால் வரும் சுயராஜ்யத்தை நான்எவ்வாறு ஏற்றுக்கொள்ள மாட்டேனோ, அதுபோல, தாய் மொழியை அலட்சியப் படுத்திக்கொண்டு வரக்கூடிய எவ்விதமான அரசாட்சியையும் நான் ஏற்க மாட்டேன்.
>
> "கல்வி புகட்டுவதில், நமது தாய்மொழியை உபயோகிக்கக் கூடாது என்று விலக்கி வைத்தல் மிகவும் கேடான செயல் முறையாகும்.
>
> "அந்தந்த நாட்டு மக்களுக்கு உயர்பண்பு நலன் களைப் போதிக்க, அந்தந்த நாட்டுப் பிரதேச மொழிகளே உயர்வுமிக்க சாதனமாக அமைய வேண்டும் என்பதே என்னுடைய அசைக்க முடியாத நம்பிக்கையாகும்!"

அறவழித் தந்தையின் தாய்மொழிப் பேச்சு அந்தந்த நாட்டுக்கு - அந்தந்தக் காலத்துக்குச் சாலப் பொருந்தும்.

ஆகவே, இம்மொழிகள் நம் தாய்த் திருநாட்டுக்கும் ஒட்டி வருவது இயல்பு: பொருத்தம்.

தேமதுரத் தமிழ்மொழி ஆட்சிமொழியாகக் கைக் கொள்ளப்பட்டது; செயல் வடிவில் படிப்படியாக முன் னேற்றமும் முற்போக்கும் தெளிவும் கொண்டு இலங்கி வருவதையும் நாம் கண்டு தெளிந்து வருகின்றோம்.

ஆனால் கல்லூரிகளிலே, தமிழே போதனா மொழியாக இயக்கப்பெற வேண்டும் என்று 'ஒருமனப்பட்ட குரல்' அண்மைக் காலத்தில் தமிழ்கூறு நல்லுலகெங்கும் முழக்கம் செய்து வருகிறது.

பல்கலைக் கழக உயர்மட்டத் தலைமைப்பீடம் முழு மூச்சோடு எதிர்த்தது.

நமது மாநிலக் கல்வி அமைச்சர் மனத்திண்மை பெற்றவர்; இத்தகைய பக்குவத்திற்கு முதற்காரணம், அன்னாரது தமிழார்வமேயாகும். ஆகவே, அவர், எதிர்த்து வந்த எதிர்ப்புக்களை துச்சமென மதித்தார். கோவை அரசினர் கல்லூரியில் போதனா மொழியாக, அமுதத்தமிழ் அங்கம் வகித்தது. சோதனையாக எடுத்துக் கொண்ட செயல்முறைத் திட்டத்தின் வெற்றியைக் கண்டு நாம் அகமகிழ்ந்தோம். இது தெய்வத் தமிழன்னையின் வெற்றி!

கோவையில் நடந்த சர்வகட்சிக் கூட்டமொன்றில் கல்வி அமைச்சர் பேசுகையில், "தமிழை ஆட்சிமொழி யாகவும், போதனா மொழியாகவும் ஆக்க, தமிழ்நாடு அரசு செய்திருக்கும் இம்முடிவு இறுதியானது. இவ்விஷயத்தில் தமிழ்நாடு அமைச்சரவையின் கருத்து ஏகமனதாக இருக்கிறது," என்று குறித்தார்.
கல்வி அமைச்சர் திரு சி. சுப்பிரமணியம் அவர்களைத் தமிழகம் இதயபூர்வமாகப் பாராட்டும்.

அவர் பேசுகையில், "அகில இந்தியக் கண்ணோட்டத்துடன் பார்க்கும்போது, மத்திய நிருவாக மொழியாக ஹிந்தியும் ஆங்கிலமும் இயங்கவேண்டியவையாகின்றன. ஆனால், ஹிந்தி மொழிக்கு நம் நாட்டில் ஆதரவு கிடையாது. ஆகவே, அவ்விடத்தில் ஆங்கிலம் இடம் காணுவது அவசியமாகிறது. ஆதலால், கீழ்மட்டத்தில் நான்காவது வகுப்பிலேயே ஆங்கிலம் பயிற்றுவிக்கப்பட வேண்டும்!" என்று அவர் மேலும் தொடரலானார். கல்வி அமைச்சரின் இக் கருத்து மட்டும் பலரது ஐயுறவுக்கு அடித்தளமானது. உயர் மட்டத்தில் தமிழுக்கும் அடி மட்டத்தில் ஆங்கிலத்துக்கும் முக்கியத்துவம் அளிப்ப தானது நாட்டு மக்களிடையே ஒரு குழப்பநிலையை மட்டுமல்லாமல், குழப்பமான மனப்போக்கையும் உண்டாக்குமென்று தலைவர் திரு ம. பொ. சி. அவர்கள் எடுத்துக் காட்டினார்கள்.

கல்வி அமைச்சர் இதுபற்றிச் சிந்தித்து முடிவெடுத்தல் அவசியம் என்பதை நாம் சுட்டிக் காட்ட வேண்டியவர்களாக ஆகின்றோம்.

கோவைக் கல்லூரியில் தமிழ்பாட நூல் வெளியீட்டு விழா ஒன்று நடந்தது. அப்போது உரை ஆற்றிய தமிழக முதலமைச்சர், பல்கலைக் கழகப் போதனமொழி பற்றிய மாநில ஆட்சியின் முடிவு இறுதியானதும் உறுதியானதுமாகும் என்று சொன்னார்கள்.

இந்தியத் துணைக் கண்டத்தில் இணைந்துள்ள மாநிலங்கள் மொழி வழியே பிரிக்கப்பட்டு இயங்கி வருவதால், அந்தந்த வட்டார மொழிகளே மாநில ஆட்சி மொழியாகவும், போதன மொழியாகவும் விளங்க வேண்டுமென்பதே அரசியல் தத்துவமாகும். இத் தத்துவத்தை உணர்ந்து கொண்டு செயல் வடிவு கொடுக்க எத்தனை தடைகள்? எவ்வளவ காலதாமதம்? எத்தனை போராட்டங்கள்!

தாய்மொழிப் பற்றும், தேசிய உணர்வும் இரு கண்களாக வாய்க்கப்பெற்ற தமிழார்வலர்களின் இடையருத நினைவூட்டலினுலும், தொடர்ந்து முழங்கிய பேச்சுக்களாலும், இப்பணி வெற்றி பெற்றிருக்கிறது என்பதையும் நாம் மறந்துவிட முடியாது.

தமிழக மக்களின் ஒருமித்த போற்றுதலுக்கு உட்பட்டது தமிழ் நாட்டின் அமைச்சரவை.

ஆனல், ஒன்று :

ஆட்சிபீடம் அதன் கடமையை இயற்றி விட்டது. 'பழைய வீம்புகளை' மறந்து இந்த நல்லுறவைப் பயன் படுத்திக் கொள்வதில் பல்கலைக் கழகம் முனையவேண்டும். தமிழில் தரமான பாட நூல்கள் வெளியிடுவதில் புத்தகப் பண்ணைகள் அக்கறை காட்ட வேண்டும்; பாடங்களைத் தமிழாக்கம் செய்வதைக் கல்வி மேலதிகாரிகள் பொறுப் புடன் கண்காணிக்க வேண்டும்!

- தொண்டர் நாதனைத்
- தூதுவிடுத்த
- தெய்வத்தமிழுக்குத்
- தேவநாகரி லிபி
- கொடுக்க ஆட்சிபீடம்
- முனைந்த சோதனைக்
- காலம் அது.
- அந்தப் பூச்சாண்டி
- எங்குதான்
- மறைந்ததோ?...

# தமிழ் எங்கே?
# தேவநாகரி எங்கே?

# தமிழ் எங்கே?
# தேவநாகரி எங்கே?

சீர் நிறைந்த தெய்வத் தமிழ் நாட்டின் இன்றைய நடப்பு நிலையை எண்ணிப் பார்க்கும் பொழுது, தமிழுணர்ச்சி பொங்கித் ததும்பி நிற்பதைக் காண்கிறோம்; தமிழ் இன உணர்வும் தமிழ்நாட்டுப் பற்றும் இடைவெளி ஏதுமின்றி நெருங்கிப் பிணைந்து நிலவி வருவதையும் நாம் உணர்கின்றோம். இத்தகைய உயிரூட்டம் தரும் சிறப்பியல்புகளால்தான் நம் நாடும், மொழியும் மென் மேலும் வளரமுடியும். அவ்வளர்ச்சியின் அடித்தளத்தில் தான் தமிழக மக்களின் வாழ்வும், வளப்பமும், பொலி வெய்தத்தக்க ஆரோக்கியமான சூழலும் உருவாகிப் பலப்படக்கூடும்.

"தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய் வோம்," என்று தம் ஆர்வக் கனவைக் கோடிட்டுக் காட்டப் புகுந்த புதுமைக் கவிஞர், "தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்," என்ற விண்ணைத் தொடும் இலட்சியத்தையும் சேர்த்து வைத்துத் தமிழ் முழக்கம் செய்திருப்பதையும் நாம் படித்துப் பெருமைப்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

பாரதியின் இப் பெருமைக்கு மற்றொரு கரும்புக் கணுவாக அமைகிறது நாமக்கல் கவிஞரின் பழம் பாடல்.

**"தமிழன் என்றொரு இனமுண்டு;**
**தனியே அவற்கொரு குணமுண்டு;**
**அமிழ்தம் அவனுடைய மொழியாகும்;**
**அன்பே அவனுடை வழியாகும்!"**

ஆம்; வரலாற்றுச் சிறப்புக் கொண்டவன் தமிழன். தொன்மைப் புகழ் வாய்ந்தது தமிழ்மொழி. தமிழ் என்ருல், இனிமை என்று பொருள்: தமிழ் எனில் அழகு: தமிழே அமிழ்தம்! இவ்வகைச் சிறப்புகள் பெற்ற தமிழ், இன்று அரசு மொழியாகவும் போதனு மொழியாகவும் விளங்கும் பெருமை பெற்று வருகிறது.

கொண்ட குறிக்கோளின் வெற்றிக்காக அல்லல் பல அனுபவித்து, அதற்காகப் போராட்டங்கள் பல நிகழ்த்திஞேம் நாம். இன்று வெற்றியும் அடைந் திருக்கின்ருேம். இந்நிலையில், மீண்டும் புதுப்புதுக் குழப்பங்களும், அர்த்தமற்ற சோதனைகளும் புறப்பட்டு நம்மைத் தொல்லைப் படுத்தி வருவதையும் நாம் நேர்முக மாகக் கண்டு வருகின்ருேம்.

அண்மையில் ஒரு நிகழ்ச்சி நடந்தது. மாநில முதலமைச்சர்களை வரவழைத்து மாநாடு ஒன்றைக் கூட்டிஞர் நேருஜி. "இந்தியா ஒரே நாடு" என்னும் உயர்ந்த கொள்கையில் ஊறி வளர்ந்து வாழ்ந்துவரும் நேருஜி, அக்கொள்கையைச் செயற்படுத்த வேண்டுமென்ற நற்கனவில் அல்லும் பகலும் திளைத்திருக்கின்ருர். அதற்காக, அவர் செய்து பார்க்கும் பரீட்சைகள் ஒன்றல்ல, இரண்டல்ல. இந்திய ஐக்கியத்திற்கு மூலாதார மானது மொழி என்பது அவரது அசைக்க முடியாத நம்பிக்கையாகும். அந்த நம்பிக்கையின் பிரதிபலிப் பாகவே, "இந்திய நாட்டிலுள்ள எல்லா மொழிகளுக்கும் ஒரே லிபி இருக்கவேண்டு மென்றும், அந்த லிபி இந்தி மொழிக்கான 'தேவநாகரி லிபி' யாகவேதான் இருக்க முடியும்," என்றும் தில்லி மாநாடு முடிவு கட்டியிருக் கின்றது. அரசியல் சட்டத்தில் அங்கம் பெறும் எல்லா மாநில மொழிகளுக்கும் பொது எழுத்தாக தேவநாகரி லிபி விளங்க வேண்டுமாம்! இம்முடிவு செயற்படுவ தென்பது பகற்கனவுக்கு ஒப்பாகும். ஆனுல், இது செயல் வடிவம் எடுத்தால்-அல்லது, சட்டத்தின் உருவம்

பெறுகின்ற நிலைமை உருவானுல், மதிப்புக்குரிய பாரதப் பிரதமரின் அசைக்க முடியாத நம்பிக்கைக்காக, தேவநாகரி வரிவடிவத்தை ஏற்றுக்கொள்ள மூன்றுகோடித் தமிழ் மக்கள் ஒப்பவேமாட்டார்கள், இது உறுதி. ஏனென்ருல், இது மானமுள்ள ஒவ்வொரு தமிழனின் தன்மானப் பிரச்சினை : தாய்மொழிப் பிரச்சினை !

தமிழுக்குத் தேவநாகரி லிபியா ?

நாம் எண்ணிப் பார்க்கிருேம். அதே சடுதியில், தமிழ் மொழியின் தனித் தன்மையையும், தெய்வத் தன்மை யையும் நாம் எண்ணி நோக்க வேண்டியவர்களாகவும் ஆகின்ருேம்.

தமிழுக்கு முதல் இலக்கணம் செய்தவன் குடமுனி. அம்முனிக்கு முதன்முதலில் தமிழைப் போதித்தவன் சிவபெருமான். தமிழ் ஆதிமொழி : அசல் மொழி. பிற தென்னிந்திய மொழிகளினின்றும் தமிழ் பிறந்ததென்று முன்னர் ஒருமுறை வாதம் செய்தவர்களுக்கு, "தமிழ் என்ருல் இனிமை : அதன் காரணமாகவே தமிழுக்கு இப்பெயர் வந்தது. ஆகவே, இதுவே அசல் மொழி," என்று சூடு கொடுத்தார் மகா மகோபாத்தியாய டாக்டர் ஐயர் அவர்கள்.

வீர மாமுனிவரைப் பற்றி நாம் அறிவோம். அவர் இத்தாலிய நாட்டில் பிறந்தவர். தென்னிந்திய மொழிகள் அனைத்தையும் கற்று முடித்த பின், தமிழ் மொழியே அனைத்தினும் சாலச் சிறந்ததென்ற முடிவுக்கு வந்து, 'சதுரகராதி'யையும் 'தேம்பாவணி'யையும் தமிழில் உருவாக்கினுர்.

இறையைப் போற்றி வணங்க உதவுகின்றன தேவாரம், திருவாசகம், திருப்புகழ் போன்ற தமிழ்ப் பாடல்கள். மற்றெம்மொழியிலும் இயற்ற வாய்ப்பிழந்த

சந்தங்களை யமகம், திரிபு, சித்திரம், வித்தாரம் முதலிய கவிமுறை இலக்கணங்களை வைத்துப் பாடவும், எழுத்தியல்பு, சொல்லியல்பு, புணர்ச்சி போன்ற விதிகள் சிறக்கச் செய்யவும் பயன்படும் உயர்தனிச் செம்மொழி இத்தமிழ் மொழி. இதன் இடத்திற்குத் தேவநாகரி எவ்வகையில் பொருந்த முடியும்?

தமிழிலேயே அர்ச்சனைகள் செய்யப்பட வேண்டுமென்ற எண்ணம் மடங்களில் வலுப்பெற்று, அமைச்சரவையின் வலுவையும் சம்பாதிக்கத்தொடங்கியிருகிறது. தமிழே போதனு மொழியாக இயங்கி வெற்றியும் பெற்றிருக்கிறது. இப்படிப்பட்ட கட்டத்தில், இந்தித் திணிப்புக்குரிய வழிவகைகள் அரசுமொழி-பயிற்சி மொழி போன்ற பிரிவுகளுடன் மத்திய அமைப்பில் மறைமுகமாக உருவாகி வருவதை யார்தான் விரும்புவார்கள்?

சென்னை உயர்நிலைப் பள்ளி எஸ். எஸ். எல். ஸி. மாணவர்கள் பலர், இந்தியைப் பாடமாக வைத்ததை எதிர்த்து ஊர்வலம் நடத்திக் கிளர்ச்சி செய்தார்கள். மாணவர்களின் செய்கையைச் சரியென்று நாம் ஏற்கவில்லை. ஆனுலும், அவர்களது செய்கைகளில் நீரோட்டம் காட்டுகின்ற தமிழார்வத்தை நாம் உணர வேண்டாமா?

மொழி வழியில் மாநிலங்கள் அமைக்கப்பட வேண்டுமென்ற கொள்கை புயல் வடிவம் கொண்டு விளங்கி வருகின்ற நேரம் இது.

பம்பாய் மகாணப் பிரிவினையைக் கண்டோம்!

'தனிப் பஞ்சாபி மொழி மாநிலம்' கோரி, சாகும் வரை உண்ணு நோன்பு இருக்கத் திட்டமிட்டு, பொற் கோயிலில் விரதமிருந்து வரும் அகாலி தளத் தலைவர் மாஸ்டர் தாராசிங் அவர்களின் லட்சியத்தை மத்திய அரசு 'வெறி' யென்று ஒதுக்கிவிட முடியாது.

மொழிப் பற்றும், மொழியுரிமையும் அந்தந்த நாட்டவர்களுக்குத் தாய்வீட்டுச் சீர்வரிசைகள் போன்றவை. இவற்றில் மதத்திய ஆட்சி குறுக்கிடுவதோ, குறுக்கிட விழைவதோ தவறு. இவ்விதமான தவறுகள் அடியெடுத்து வைக்காமல் இருக்க வேண்டுமென்று தான் மொழிவழித் தேசிய இன அடிப்படையில் மாநிலங் களுக்குச் சுயாட்சி வழங்க வேண்டுமென்று நாம் அடிக்கடி வலியுறுத்தி வருகின்றோம்.

தாய்மொழிச் சுதந்திரம் பற்றியும், அதன் அவசியம் குறித்தும் பேசும் பொழுது, "சத்தியம், அஹிம்சையைப் பலி கொடுத்துவிட்டு, அதனால் வரும் சுயராஜ்யத்தை நான் எவ்வாறு ஏற்றுக்கொள்ள மாட்டேனோ, அதேபோல, தாய்மொழியை அலட்சியப் படுத்திவிட்டுவரும் எந்தவித ராஜ்யத்தையும் நான் ஏற்க மாட்டேன்," என்று காந்தியடிகள் குறித்திருப்பதையும் மத்திய ஆட்சியினர் பார்வைக்கு வைக்கவேண்டியது நம் கடமை:

நேருஜி தம்முடைய பொருள் நயம் பொதிந்த பேச்சுக்களிலும், எழுத்துக்களிலும் 'உணர்ச்சி ஒற்றுமை' (emotional-integration) யைப்பற்றி அடிக்கடி குறிப் பிட்டு வருகின்றார். வரவேற்கின்றோம். ஆனால் அவர் கனவு காணும் இந்த உணர்ச்சிப் பிணைப்பு பாரத நாட்டு மக்களிடம் ஏகோபித்த அளவில் பண்பட வேண்டு மென்றால், "பிரிவினைபற்றிப் பேசுவது சட்டப்படி குற்றம்!" என்று பூச்சாண்டி காட்டினால் மட்டும் போதுமா?

மனித மனங்களின் உணர்ச்சிகள் மதிக்கப்பட வேண்டும். பண்பாட்டுச் சுதந்திரமும், தேசிய சுய மரியாதையும் காக்கப்பட வேண்டும். தாய் மொழிப் பாதுகாப்பிற்கு அரசியல் சட்டரீதியான உத்தரவாதம் கொடுக்கப்பட வேண்டியதும் இன்றியமையாததாகும்.

உணர்ச்சி ஒற்றுமை உருவானுல்தான், தேசிய ஒற்றுமை உருவாக முடியும்!

உலகம் புகழும் உத்தமத் தலைவர் நேருஜி, தமிழர்களின் உள்ளங்களைத் தொடப் பாடுபட வேண்டுமே தவிர, உணர்ச்சிகளைத் தொட முயலக் கூடாது. கன்னித் தமிழ் மொழியின் பொற்புணர்ந்து, அதன் உரிமையில் குறுக்கிடும் இந்த 'லிபி!' நஞ்சை விலக்கி, மூன்று கோடித் தமிழர் நெஞ்சங்களில் என்றென்றும் வாழும் உறவைப் பாரதப் பிரதமர் பலப் படுத்திக் கொள்வாரென்றும் எதிர்பார்க்கின்ருேம்.

- 60-ஆண்டு நிகழ்வு
- திருவள்ளுவரின்
- நினைவுக்குத்
- தாபல் தலைகள்
- சாட்சியாகின்றன.
- பாரதி, வ. உ. சி.
- கட்டபொம்மன்,
- கவிமணி போன்றோர்
- களையும் அரசு மதித்துப்
- போற்றவேண்டும்.
- தியாகமும் புலமையும்
- அப்போது தானே
- நிறக்க முடியும்!...

# வான் புகழ் வள்ளுவர்

# வான் புகழ் வள்ளுவர்

ஆம்; தமிழரசுக் கழகத்தின் நடைமுறைச் சரித்திரப் புத்தகத்திலே மற்றுமொரு வெற்றி ஏடு நம் கண் முன்னர் விரிந்திருக்கிறது. 'அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டிக் குறுகத் தறித்த குறள்' என்னும் சிறப்புப் பெற்ற தமிழ் மறையை இயற்றியருளிக் காலத்தை வென்ற தெய்வத் திருவள்ளுவரின் இவ் வெற்றியே நமது வெற்றியுமாகும்.

தமிழ்ச் சமுதாயத்தின் சிறப்பு மிகுந்த வாழ்வுக்கும், சீர்கொண்ட வளத்துக்கும் ஏற்றம் தரும் வகையில், அன்றிலிருந்து பணியாற்றிக் கொண்டிருக்கிறது தமிழரசுக் கழகம். நேர்மைமிக்க தமிழ் உள்ளங்களிலே தன்னேரில்லாத் தனித் தலைவராகக் கொலு வீற்றிருப்பவர் சிலம்புச் செல்வர் அவர்கள். தமது அயராத் தொண்டின் மூலமாகவும், சலியாத உழைப்பின் வாயிலாகவும் தமிழகத்திற்கு அவர்கள் செய்துள்ள நன்மைகள் பல வுண்டு. அந் நன்மைகளிலே மற்றுமொரு தலைசிறந்த வெற்றி-போற்றுதலுக்குகந்த ஒரு நிகழ்ச்சி கடந்த பிப்ரவரி பதினைந்தாம் நாளில் நடந்தது. அது சாமானியமான நிகழ்ச்சியல்ல; மத்திய அரசாங்க முத்திரை பெற்றதாகும். தபால் தலைகளிலே, வான் புகழ் வள்ளுவரின் திருவுருவப் படம் பொறிக்கப்பட்டிருக்கின்ற இன்ப நிகழ்ச்சியையே குறிப்பிடுகிறோம்.

வடதிசைக் கவிஞர்களின் உருவப் படங்களைத் தபால் தலைகளில் அரசினர் அமைத்த போழ்திருந்து, நம் தமிழ் மண்ணைச் சார்ந்த புலமை சான்ற கவிஞர் திலகங்களின் உருவங்களையும் தபால் தலைகளில்

வெளியிட வேண்டுமென்று முதன் முதலில் அரசுக்கு எடுத்துச் சொல்லி, பின்னர் இந்நாள் வரை, நேரிலும், கடிதங்களின் தொடர்பிலும் வாதம் புரிந்து, இன்றைக்குச் சோதனைகள் பலவற்றிலிருந்து மீண்டும் சாதனை பெற்றிருக்கிறார் செந்தமிழ்ச் செல்வர்; தம்முடைய தனிப் பெரும் வெற்றியின் வழியாகத் தமிழகத்தின் மக்கள் அனைவருக்குமே அமைதியையும், ஆனந்தத்தையும் பெருமையையும் தேடித் தந்திருக்கிறார்.

அஞ்சல் துறையில் புதிதாக நியமனம் பெற்ற அமைச்சர் திரு டாக்டர் ப. சுப்பராயன் அவர்களை நாம் இதயம் ஒன்றிய நன்றியுணர்ச்சியுடன் பாராட்டு கின்றோம்; பணிவன்புடன் நன்றி நவில்கின்றோம். தமிழர் ஒருவர் மத்திய அரசியல் அமைச்சர் பதவி ஏற்றவுடன் தமிழகத்திற்கு விளைந்த இம்முதல் வெற்றியை 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ்நாடு' என்றென்றும் நினைவிற்கொள்ளும்.

'பாமுறை தேர் வள்ளுவர் முப்பாலான, 'திருக் குறளின் அருமை பெருமை அளவிடற்பாலது. உலகத்தின் பிறமொழிகள் பலவற்றிலும் நம் தெய்வத் தமிழ் மறை மொழிபெயர்க்கப்பட்டிருப்பது ஒன்றே இதன் வெற்றிச் சிறப்புக்கு ஓர் உயரிய எடுத்துக்காட்டு. பொய் உலகில் அவதரித்து, நிலையில்லாத வாழ்வெனும் ஆடுகளத்தில் அங்கம் வகிக்கும் மனித ஜாதிக்கு இந்தக் குறள் ஒளி காட்டும் ஒரு கைவிளக்கு. அரசியலாருக்குப் படிப்பினை தரும் அற்புதமான பாடப் புத்தகம்; தமிழ்ப் பண்பு துலங்கும் மனைகளுக்கு இது ஒரு மனை விளக்கு! "திருவள்ளுவர் இயற்றிய திருக்குறளைத் தமிழின் மூலமே படிக்கவேண்டு மென்பது என்னுடைய ஆவலாகும்!" என்று அண்ணல் காந்தியடிகள் முன்னர் கூறியிருப்பதை யார்தாம் மறப்பர்?

இத்தகைய் சிறப்புமிக்க தெய்வமறையை அருளிய திருவள்ளுவரின் திருவுருவத்தைச் சிறப்பாக வரைந்த திரு கே. ஆர். வேணுகோபால சர்மா அவர்களுக்கும் நம் பாராட்டு உரியது.

நாளது வைகாசி மாதத்தில் வரயிருக்கின்ற தெய்வப் புலவர் வள்ளுவனாின் நினைவு நாளுக்கு இந்நிகழ்ச்சி நல்லதொரு முன்னோட்டம் போன்று அமைந்திருப்பதில் மகிழ்வு பெறுகிறோம். பாட்டுக்கொரு புலவன் பாரதி, கப்பலோட்டிய செம்மல் வ. உ. சி-இப்படி, தமிழகத்தின் பெருமைக்கும் தமிழ்மொழியின் நலனுக்கும் பணி புரிந்த தகைமையாளர்களின் திருவுருவங்களையும் தொடர்ந்து தபால் தலைகளில் அமைத்து வெளியிடுவதில் திரு சுப்பராயன் அவர்கள் மனப்பூர்வமாகக் கருத்துச் செலுத்துவாரென்றும் நாம் நம்புகின்றோம்.

- காலம்
- என்றென்றும்
- வணக்கம்
- சொல்லும் பெற்றி
- பெற்ற உலகப்
- பெரு மேதைக்கு
- நூற்றாண்டு விழா
- கொண்டாடப்பட்டது.
- குருதேவர்
- தாகூரைப் பற்றிய
- இனிய சிந்தனைகள்
- ஒன்று, இரண்டா!

# குருதேவருக்கு அஞ்சலி

# குருதேவருக்கு அஞ்சலி

"ஜபமாலை உருட்டுவதை விட்டு விடு; மந்திரமும் தந்திரமும், ஆடலும் பாடலும் ஆண்டவனைக் காட்ட மாட்டா!

தாளிட்டு அடைபட்ட கோயிலின் இருளடைந்த மூலையில் யாரைப் பூசிக்கின்றாய்? கண்களைத் திறந்து, உன் ஆண்டவன் உன் எதிரே இல்லை என்பதை உணர்ந்து கொள்!

கடினமான தரையில் ஏர்கட்டி உழுவோரிடமும், சாலை அமைத்திட சரளைக்கல் உடைப்போரிடமுமே தெய்வம் இருக்கிறது; அவர்களுடன் 'அவன்' மழையில் நனைகிறான்; வெயிலில் உலர்கிறான்; அவன் ஆடையில் தூசி படிந்திருக்கிறது. உன் காஷாயத்தைக் களைந்தெறி; கடவுளைப் போல நீயும் புழுதியில் இறங்கி வா!

பூவையும் நறும்புகையையும் ஒதுக்கிவிட்டு வெளியே வா! உன் ஆடை கிழிந்து, அழுக்கடைந்தால், என்ன? நெற்றி வேர்வை நிலத்தில் சொட்ட உழை. நீ உன் ஈசனைக் கண்டிடுவாய்!..."

காலத்தைக் கடந்து நின்று ஒலி கொடுக்கிறது இந்தத் தெய்விகக் குரல். இதுவே காலத்தால் நிலை பெற்றுவிட்ட ஞானயோகியின் தீர்க்க திருஷ்டி வாக்காகவும் அமைந்து விடுகிறது. மனிதனைப் படைத்த ஆண்டவனுக்கும், ஆண்டவனைப் படைத்திடும் மனிதனுக்கும் இடையே புகுந்து ஒலிபரப்பும் இத்தகைய புரட்சிக் குரலுக்குச் சொந்தக்காரர் வேறு யாராக இருக்கமுடியும்,

குருதேவரைத் தவிர? 'கீதாஞ்சலி'யின் அமரவாக்கு ஆயிற்றே!

தாகூர் பிறந்த இடம்: கல்கத்தா, நாள்: 1861, மே 7. மஹரிஷி தேவேந்திரநாத் தாகூருக்கு அவர் பதினான்காவது பிள்ளை; கடைக் குட்டி.

கவிஞர் பிரான் சொல்லுகின்றார், "குழந்தைப்பருவம்! ஆஹா! வாழ்க்கையின் விடியற்காலம் அல்லவா அது!" என்று.

நிதிமிகுந்த செல்வக் குடும்பத்தில் பிறந்த ரவீந்திரருக்கு வீட்டை விட்டு வெளியுலகைக் காண நேர்ந்த அந்த வாய்ப்பே அவரது இலக்கிய வாழ்க்கையின் மகிழ்வுக்குரிய மூலத்திருப்பம் ஆகும். 'இளமை நினைவுகள்' என்ற நூலில் தம்முடைய இளம் பிராயத்துக் கற்பனைகள் குறித்துப் பேசும் பொழுது, இவ்வாறு குறித்துள்ளார்.

தாகூரின் மூத்த சகோதரரான சோமேந்திராவும் அவரது சகோதரி மகனான ஸத்யாவும் அவரை தனியே விட்டுவிட்டுப் பள்ளிசென்று, பிறகு திரும்பும் பொழுது, அங்கு நடந்த அனுபவங்களைப் பற்றிச் சொல்லுவார்கள். தாகூருக்கு தானும் பள்ளி செல்ல வேண்டுமென்ற துடிப்பு மிஞ்சிக் கொண்டே போகுமாம். இதை உணர்ந்த போதனாசிரியர் ஒருநாள் அவரைப் பார்த்து, "நீ இப்போது பள்ளிக்கூடம் போக வேண்டுமென்றுதான் துடிப்பாய்; ஆனால் பின்னர் ஒரு நாளில், இந்தப்பள்ளி எனும் சிறையிலிருந்து விடுபட்டால்போதும் என்று நீயே துடிப்பாய்!" என்றார்.

ஆசிரியரின் இந்த முன்னோக்குச் சொற்கள் அப்படியே மெய்யாய் விட்டன அல்லவா? பள்ளிச் கூடத்தை ஏறக்குறைய சிறை போலாக்கி விட்டிருக்கும்

நவீனப் படிப்பு முறையை மாற்றியமைக்கும் நோக்கத்துடன் வழிகாட்டியாக அமைந்து, அமைத்த குருகுலம் தான்: 'சாந்தி நிகேதனம்'. 1900 டிசம்பரில் ஆரம்பமானது இது. இந்தியக் கலாசார வழித் தொடர்பும், புதிய சமுதாயத்தின் தென்பு மீட்டும் லட்சியங்களுமே இப் பள்ளிக்கு ஆதார சுருதியாயின. 'உலகப் பல்கலைக்கழகம்' என்னும் கவிபிரானின் லட்சியக் கனவுக்கு அத்தாட்சியாக 1921 டிசம்பரில் 'விஸ்வபாரதி' தோன்றிற்று.

கவிஞன் யார்?

பாமர மனிதனின் கற்பனை மனத்துக்கும் ஊட்டம் கொடுத்துப் பேணும் செவிலித்தாய்தான் இந்தக் கவிஞன்! இயற்கை அன்னையின் மாண்பு மிகுந்த மடியில் தவழ்ந்து வளர்ந்தார் தாகூர். இயற்கை நலம் அவருக்குச் சேம நிதியானது; வெட்ட வெட்ட கொட்டிக் காட்டும் காவியச் சுரங்கம் ஆனது. "கவியென்று நாம் கௌரவிக்கும் ஒருவனிடத்தில் உள்ள சிறப்பு யாதெனில், நாம் சொல்ல விழைவதையெல்லாம் அவன் ஒருவனே அழகாகச் சொல்லி முடிக்கின்றான்." கவிஞனுக்கு வரம்பறுக்கிறார் கவியரசர். அவரது முடிவுக்கே முத்தாய்ப்பு வைக்கின்றாள் இயற்கை அன்னை. "நாம் இயற்கையின் எழிலிலே இன்பத்தையே காண்கிறோம்; உண்மையையே தரிசிக்கிறோம்; இயற்கை உலகிலும் ஒழுக்க உலகத்திலும் நாம் அழகின் ஒருமைப் பாட்டையே கண்டு இன்புறும்போது, நாம் கலையின் போக்கை சர்வசுதந்தரமாக வெளியிட முடிகிறது!"- இப்படிப்பட்ட நுண்ணிய கருத்துரைகளை நுண்மாண் நுழை புலம் அமைத்துச் சமைத்திட ரவீந்திரரால் தானே முடியும்!

ஆங்கிலப் பாடல்களும், வைணப் பாசுரங்களும், உபநிஷத்துக்களும் தாகூரின் இளங்கவியுள்ளத்தை மேலும் தூண்டிவிட உதவின. 'காலைப்பாடல்கள்' புனைந்தார், அழகின் இயற்கைக் கவர்ச்சியில் லயித்திருந்த

கவிமனம் படிப்படியாக வளர்ந்தது; வளர்ச்சி கண்டது. பரிபக்குவம் எய்திய மனததிட்பம் உருவானது; வாழ்வின் தத்துவம் சுடர்தட்டித் திகழ்ந்தது. 'கீதாஞ்சலி' பிறந்தது தாகூர் உலக அரங்கத்தில் நின்று புகழ்கொடி ஏந்தித் திகழ்ந்தார். 1913ல் நோபல் பரிசு பெற்றார். இந்தியத் துணைக்கண்டம் இறும்பூதெய்தியது. பொய்யெனும் இருட்திரை விலகி, மெய்யான ஒளி கொண்ட நம்பிக்கைச் சுடர் பிரகாசிக்கத் தொடங்கியது.

தாகூர் அரசியல்வாதியல்லர்; ஆனாலும், மாபெரும் தேசியவாதி. வங்கத்தில் நடைபெற்ற சுதேசி இயக்கத்தில் பெரும்பங்கு ஏற்றார். அவரது தேசப்பற்று, உலகத்தின் சகலவிதமான குறுகிய நோக்குகள் அனைத்தையும் சாடி ஓடியது. இந்தியாவின் கழிந்த காலத்திற்கும் நிகழ் காலத்துக்கும் அன்புப் பாலம் கட்டவும் அவர் செயற்பட்டதுண்டு. பலவிதமான கருத்து மாறுதல்களையும் விலக்கி, கிழக்குக்கும் மேற்குக்கும் தொடர்பு வைக்க விரும்பி, காரியங்களில் இறங்கினார் அவர். 'மனிதாபிமானம்' பெற்று விரிந்த தாகூரின் இத்தகைய 'அகில உலகக் கண்ணோட்டம்' உலகப் பெரியார்களின் நல்லெண்ணங்களை வயப்படுத்திக் கொண்டது. "இந்தியக் கவி திலகமான தாகூர் பிறரை விட கிழக்குக்கும் மேற்குக்குமான ஐக்கியத்துக்கும் பிணைப்புக்கும் கூடுதலாகவே செய்திருக்கிறார்." என்று பாராட்டுத் தெரிவிக்கலானார் ரொமெய்ன் ரோலாண்ட்.

செயலுக்கு காந்தி என்றும் எண்ணத்திற்கு தாகூர் என்றும் ஓரிடத்தில் குறிப்பிடுகிறார் நேருஜி.

"வங்காளத்திலே வளர்ந்து வந்த நடுத்தர வகுப்பு நவ இந்தியாவில் நிகரற்ற இலக்கிய மேதைகளை அளித்து, வங்க இலக்கியம் தாகூர் என்ற உலக மேதை மூலம் இமயம்போல உயர்ந்துவிட்டது," என்று புகழ்ந்திருக்கிறார் பேராசிரியர் ஹுமாயூன் கபீர்.

கவி தாகூரின் கால்கள் இந்திய மண்ணில் ஊன்றி யிருந்தன; அவரது கவிமனம் இந்திய ஞானத்தில் ஊறித் திளைத்திருந்தது. அவர் இந்திய இலக்கியத் தாயின் தவப்புதல்வர்.

பாரதப் பண்பாடு தனி மகத்துவம் பூண்டது. அதுபோலவே, தாகூரின் கதைகள் ஈட்டிய புகழ்பெரிது. 'ஸுபா', 'தபால் காரன்' 'உடற்கூடு' போன்ற அற்புத மான சிறுகதைப் படைப்புக்களைப் புகழ்வதா? 'கவிழ்ந்த படகு', 'வீடும் வெளியும்', 'இரு சகோதரிகள்' முதலான நவீனங்களைப் போற்றுவதா? சிருஷ்டித் தத்துவத்தின் காவிய விளக்கமாகவும் சிருஷ்டியின் புதிரைச் சொல்லும் கதைக் கோவையாகவும் பொலுவுறும் 'தங்கப் படகு' போன்ற கதைச் சித்திரங்களின் வண்ணங்களை வாழ்த்த வார்த்தைகள் ஏது? அவர் பாடிய 'தேசிய கீதம்' காலத்தை வெல்ல வல்லது !

தாகூர் மனித மகாகவி, ஏனெனில், கவிக்குரிய சிறப்பியல்புகளுக்கெல்லாம் மகுடமாகத் திகழ்ந்த மனி தாபிமானம், அவரது இதயத்தில் வற்ருமல் ஊறிக் கொண்டிருந்தது. தொல்லைப்படும் பிறந்த நாட்டுக்காக தொல்லைப்பட்டவர் அவர். கவியின் மனத்தூய்மை நிரம்பிவழிந்த அந்தத் தெய்விகப் பண்புச் சுடர் அவரை உலக மேடையில் கொண்டுபோய் நிறுத்தியது. இன்று நாம் தாகூரின் பெயரைக் காட்டிப் பெருமை அடைகின்றோம். குருதேவரின் நூற்ருண்டு விழா இப் பொழுது உலக மெங்கும் நடைபெறுகிறது. உலக மேதையின் நினைவு நாளிலே, அன்னாரது விலைமதிக்க முடியாத திறனைப் போற்றி, அவரது கவி இதயத்துக்கு அஞ்சலி செலுத்துகிறோம்.

- 'வாவித் தடவயல்
- சூழ் திருத்தணிமாமலை
- வாழ் சேவற் கொடி
- யோனும் தமிழ்த்
- தெய்வத்தை
- நினைப்பவர்கள் தணிகை
- கொண்ட தலைவர்
- ம. பொ. சி. அவர்களையும்
- நினைக்கக் கடப்பாடு
- கொண்டவர்கள்.
- இப்போது அவர்
- அறுபது கற்களைக்
- கடந்து விட்டார்.
- இது ஐம்பத்தாறுவது
- பிறந்த நாள்
- விழாவை
- நினைவூட்டும்!...

# வாழும் தமிழே, வாழி!

# வாழும் தமிழே, வாழி!

பிறர் நலனுக்கெனத் தன்னைத் தானே தியாகம் செய்து கொள்ளும் பெரும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொண்டு வெற்றி காணும் போதுதான், மனிதன் பிறவிப் பயன் அடைகின்றான். அப்படி யென்றால், திரு. ம. பொ. சி அவர்கள் ஏறத்தாழ முப்பதாண்டுகளுக்கு முன்னரே பிறவிப் பயனை எய்தி விட்டார் என்றுதான் சொல்ல வேண்டும், ஆம்; அவர் தனக்கென வாழாப் பிறர்க் குரியாளர்.

" ஒழுக்கம், அறிவு, ஆற்றல், ஆண்மை, தியாக உணர்வு ஆகிய குண நலன்கள் அனைத்தும் ஒருங்கு பெற்றவரே தலைமை பதவிக்குப்' பூரண தகுதியுடையவ ராவார். இத்தனை தகுதிகளையும் பெற்ற ஒரு தலைவரை நாம் நினைத்த மாத்திரத்தில் சிருஷ்டித்துவிட முடியாது. பல தலை முறைகளுக்கு ஒரு முறைதான் அத்தகைய தலைவர்கள் தோன்றுகின்றனர். கால சக்திதான் அவர்களை நமக்குத் தருகின்றது."

தலைமைப் பதவிக்கு திரு. ம. பொ. சி. எல்லைகட்டும் பண்புகள் இவை, இத்தகைய லட்சியங்கள் ஒவ்வொன்றி லும் அவரை இன்றைத் தமிழகம் தரிசிக்கின்றது. நாம் பாக்கியம் செய்தவர்கள் - செயற்கரிய சாதனைகள் செய்த தலைவர் பெறற் கரிய பெருவாய்ப்பாக நம் தலைமுறைக்குக் கிடைத்திருக்கின்றார். கால சக்திக்கு நம்முடைய பணிவு மிக்க வணக்கமும், நன்றியும் உரியது.

"சிவம் - அன்பு; ஞானம் - வீரம். இப்பொழுது நாட்டிற்கு அன்பு வீரம் தேவை. அன்புள்ள இடத்தில்

வீரம் உண்டு. வீரமுள்ள இடத்தில் அன்பு உண்டு. 'ஈர நெஞ்சினர் யாதும் குறைவிலார், வீரமென்ருல் விளம்புந் தகையதோ' என்பது சேக்கிழார் திருவாக்கு. வறுமையிற் செம்மை - அன்பு வீரம். தமிழ் முரசு - தமிழரசு சிவஞானம் பொலிக, பொலிக!" என்று தமிழ்த்தென்றல் திரு வி. க. அவர்கள் சிலம்புச் செல்வரைப் பற்றிக் கூறியுள்ளதில் ஒரு பகுதியை இப்பொழுது நினைவூட்டுகிறோம்.

வாழ்க்கைச் சதுரங்கத்திலே அரசியலைச் சூதாட்டக் காயாக்கி விளையாடும் அரசியல் வாதிகளுக்கு இலக்கியக் கடலில் மூழ்கித் திளைக்கும் ஆர்வம் ஒருபோதும் உண்டாவதில்லை. இவ்வுண்மைக்கு சரித்திரத்தின் பின் பகுதிகள் சான்ருகும். அரசியல், இலக்கியம் என்ற மாறுபட்ட இருதுருவங்களை இன்று ஒன்ருக்கி இணைத்துக் காட்டிய பெருமைக்குரிய தமிழ்ப் பெயர் ஒன்றே ஒன்று உண்டு - அதுதான் ம. பொ. சி!

"தலைவர் சிவஞானம் சிறந்த தமிழறிஞர்; சிலப்பதிகாரத் தமிழர்; வீறு பெற்ற பேச்சாளர்: சொல்லும் செயலும்ஒன்ருன வினைத்திட்ப முடையார்; நாட்டிற்கே உயிர்வாழும் தியாகி: எல்லா விடுதலை போராட்டங்களிலும் சிறை சென்ற வீரர். விடுதலை பெற்ற தமிழரசை நிலைநாட்ட உணர்ச்சி கொண்டெழுந்த தனித் தமிழர்." என்று புகழ்மாலைகள் சூட்டுகிருர் யோகி திரு சுத்தானந்த பாரதியார்.

"தமிழினத்தின் உயர்வை அவற்றின் மூலம் மக்களுக்குப் புலப்படுத்துவதற்காகவே அவர் தமிழ் இலக்கியங்களைக் கற்கிருர்; இது மிகவும் பயன்தரும் செயல்," என்று பாராட்டியிருக்கிருர் கவிமணி அவர்கள் தேச விடுதலைக்காகச் சிறையிலே செக்கிழுத்த தவப்புதல் வனைப் பற்றி, நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் படைத்த இளங்கோ வடிகளைப் பற்றி, கயத்தாற்றில் தொங்கிய வீரபாண்டிய கட்டபொம்மனைப் பற்றி அந்நாளில்

அறிந்தவர்கள் கொஞ்சம். ஆனால், இந்நாளிலே அவர்களைப் பற்றி அறியாதார் மிகமிகக் கொஞ்சம். தமிழ் இல்லங்களிலே இம் மூவரும் தனிப்பெருந் தியாகப் பிறவிகளாகச் சுடர் விடுதற்கு ஆதிகாரணமானவர் நம் தலைவரே என்பதை ஊர் அறியும்: ஏன் உலகமும் அரியுமே!

'பணத்தைக் கடவுளாகக் கருதும் நாம், அந்தக் கடவுளைச் சிம்மாசனத்தை விட்டு வீழ்த்தி விட்டோம்' என்று வருத்தப்படுகிறார் மகாத்மா. நம் அருமைத் தலைவர் அவர்களோ கடவுளைப்பற்றி எண்ணுவது உண்டு ஆனால் பணத்தைப் பற்றி எண்ணுவது கிடையாது. நேர்மையாளர்களைக் கடவுள் பரிசோதிப்பதாக எல்லா நூல்களிலும் சொல்லப்படுகிறது. திரு சிவஞானம் அதற்கு விலக்கல்ல. எதிர்த்து வந்த பயங்கரச் சூதுகள், தந்திரமாக நெருங்கிய அரசியல் சூழ்ச்சிகள், பொறாமை விளைவித்த இன்னல்கள் பல அடுக்குகள் - இவையெல்லாவற்றையும் சமாளித்து வந்திருப்பவர் அவர். 'தமிழன் என்றொரு இனமுண்டு; தனியே அவர்க்கொரு குணமுண்டு என்று நம் நாமக்கல் கவிஞர் சித்திரிக்கும் 'அந்தத் தமிழன் 'தான் அவர்.

ஆங்கிலேயருக்கு அடுத்த படியாக ஆதிக்கம் வகிக்கும் வடவரின் பிடியிலே மயங்கி விழவிருந்த தேசியத் தமிழ் மக்களைத் தக்க சமயத்திலே தமிழ் உணர்ச்சி ஊட்டித் தட்டியெழுப்பியதையும், தமிழகத்தின் தலைநகரைப் பாதுகாத்துத் தந்தையும், சரித்திரப்பிரசித்தி பெற்ற கன்னியாகுமரிப் பகுதிகள் நம் தமிழகத்தில் வந்து சேர வகை செய்ததையும், நியாயமாக நமக்குக் கிடைக்க வேண்டிய வட எல்லை தெற்கெல்லைகளை மீட்டு வெற்றி காணப் பெரு முயற்சியோடு உழைத்து வருவதையும் தமிழினம் எப்படி மறக்க முடியும்? அவை மட்டுந்தானா?

நாட்டிலே அனாசாரக் கும்பல்கள் பெருகிக் கலாசாரத்தையே அழித்துக் கொண்டிருந்த இந்த நேரத்தில்

சிலம்புச் செல்வரின் செந்தமிழ் முழக்கம் தெருவெல்லாம் எதிரொலித்துப் பண்டையப் பெருமையைப் பாதுகாத்து வருகின்றது.

தமிழ் கூறு நல்லுலகம் இலக்கியச் சிறப்புக் கொண்டது; அதைப் போலவே, தமிழினத்தின் தன்னே ரில்லாத் தலைவர் திரு ம. பொ. சி. அவர்களும் இலக்கியச் சிறப்புப் பெற்றவர். இலக்கியமும் அரசியலும் என் றென்றும் பொன் எழுத்துக்களிலே பொறித்துக் காட்டும் அளவுக்குச் சீரும் சிறப்பும் வாய்க்கப் பெற்ற செந்தமிழ்ச் செல்வரின் ஐம்பத்தாறுவது பிறந்த நாள் விழா ஜூன் 25-ஆம் நாளில் மிகவும் விமரிசையாகக் கொண்டாடப் பட்டது. காங்கிரஸ் மகாசபையின் உருவாக்கத்திற்குத் தம்மையே காணிக்கை வைத்த சிலம்புச் செல்வரின் விழா, தேனும்பேட்டை காங்கிரஸ் திடலில் நடைபெற்றது பொருத்தமுடையதும் ஆகும்.

தேசப்பற்றுக்கு ஓர் உறைவிடம் தேவையா? பொது நலப் பண்பிற்கு ஓர் உருவப்படம் வேண்டுமா? அறம் காத்து, அன்பு பேணி வாழ்க்கை நடத்தும் தத்துவத் துக்கு ஒரு விளக்கம் விரும்புகிறீர்களா? இவை அனைத் திற்கும் ஒருருவாகத் திகழ்கிறார் திரு ம. பொ. சி.

திருச்சி, அர்ச் சூசையப்பர் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர் திரு ஐயன்பெருமாள் கோனார் அவைத் தலைமை ஏற்றுப் பேசுகையில், பண்டைத் தமிழ் இலக்கியச் சிறப்புப் பூண்ட 'வெள்ளணி விழா'வை விவரித்து, ம. பொ. சி. அவர்களின் இப்பிறந்தநாள் விழா, அந் நாளைய வெள்ளணி விழாப்போல கோலாகலமாகக் கொண்டாடப் படுவதாகக் குறிப்பிட்டார். கடலுக்கு உவமை காட்டி 'எங்கள் தமிழ்ச் சிவஞானம் வாழ்க!' என்று நெஞ்சுருக வாழ்த்தினார் கவிஞர் கொத்தமங்கலம் சுப்பு. கொள்கைப் பிளவுகளைக் கடந்து ஏனைய கட்சித் தலைவர்களும் புகழ்மாலை சூட்டினார்கள். தலைவர்

இராஜாஜி உள்ளிட்ட பல மேதைகள் வாழ்த்துதல்களைத் தெரிவித்திருந்தார்கள்.

ம. பொ. சி. அவர்களின் வாழ்வே ஒரு தனிக்கதை. வறுமைக் குடியில் அவதரித்தார்; இல்லத்தையே பள்ளியாகக் கொண்டார்; அன்னையையே ஆசிரியையாக ஏற்ருர். சமயக் குரவர்களின் பக்திப் பாடல்கள் இவரது உள்ளத்தைப் பண்படுத்தின. அச்சகத் தொழிலாளியாக அலுவல் பார்த்து வந்த இவரது செவிகளில், 'சுதந்திரம் எனது பிறப்புரிமை' என்னும் தாரக மந்திரத்தின் எதிரொலி கேட்டது. 1927ல் காங்கிரஸில் சேர்ந்தார். உப்புச் சத்தியாக்கிரகம், சட்டமறுப்பு இயக்கம், தனிநபர் சத்தியாக்கிரகம், ஆகஸ்ட் புரட்சி, அரிஜன இயக்கம், மதுக்கடை மறியல் போன்ற சகலவிதமான போராட்டக் கட்டங்களிலும் இரண்டறக் கலந்தார்; பலமுறை சிறைத் தண்டனையையும் அனுபவித்தார். 'சான்ருேர்களுடைய செல்வமே குணச்சிறப்புத்தான்' என்று கூறுகிற தல்லவா தமிழ் மறை? இதற்கு ஓர் இலக்கணம் நம் அருமைத் தலைவர். ஒழுக்கம், அறிவு, ஆற்றல், ஆண்மை, தியாக உணர்வு போன்ற குணநலன்களுடன் திகழும் இவரை நம் தமிழ்த் தாய்த் திருநாட்டுக்குத் தந்த காலசக்திக்கு நாம் அஞ்சலி செலுத்தவேண்டும்.

1946, நவம்பர் 21ல் தமிழரசுக் கழகம் பிறந்தது.

ஞானத் தமிழ்மொழி ஞாலமெல்லாம் பரவி வளர தொல்லை வினைதரு தொல்லையகன்று' தமிழகம் சிறக்க-சிவஞானத் தமிழர் இயற்றிய தொண்டுகளை, எல்லைப் போராட்டம் தொட்டு நேற்று நடந்து முடிந்த தமிழ்நாடு பெயர்ப் போராட்டம் வரை நடைபெற்ற நிகழ்ச்சிக் குறிப்புக்கள் எப்பொழுதும் நினைவூட்டிக் கொண்டே யிருக்கு மன்ருே!

'ஐயா' அவர்களின் பொன் விழா இன்றும் நம் மனக் குறிப்புப் புத்தகத்தில் பொன் வண்ணம் கொண்டு விளங்கின்றது. நமது மாண்புமிகு தலைவர் நன்றி தெரிவித்துப் பேசும்பொழுது, "அறிவும் பண்பும் சேர்ந்த ஒன்றுக்குப் பெயர்-தமிழ். அந்தத் தமிழ் வழங்கும் நிலத்திற்குப் பெயர்தான்-தமிழ்நாடு. அந்தத் தமிழுக்கும் தமிழ் நாட்டுக்கும் பாடுபடும் தொண்டனுக்குப் பெயர்தான்—சிவஞானம்!" என்று புலப்படுத்தினார்கள். ஆம்; வாழும் தமிழ் ம. பொ. சி!

'அருமைமிகு தமிழகம் முழு சுயாட்சி உரிமை அடையும் வரையில் நான் ஓய்ந்திருக்கமாட்டேன்; உரிமைக்கு வேங்கடம்; உறவுக்கு இமயம்; நட்பிற்கு உலகம் என்ற வகையில் தமிழரசுக் கழகம் தொண்டாற்றும்; கழகம் ஈடுபட்டு எய்திய வெற்றிகளில் எல்லா அரசியல் அமைப்புகளுக்கும் பங்கு உண்டு," என்று திரு ம. பொ. சி. தம் நன்றியுரையில் தெரிவித்த பான்மை பொது மக்கள் அனைவரையும் பெருமையுறச் செய்தது.

O அகில இந்திய காங்கிரஸ் தலைவர்
O திரு காமராஜ் அவர்கள் தமிழ்நாட்டுக் காந்தி.
O ஆம்; அவர்களே தென்னாட்டுக் காந்தியும் ஆவார்!
O பாரதப் பிரதமர் திரு லால்பகதூர் சாஸ்திரி
O அவர்கள் தாஷ்கண்ட் ஒப்பந்தத்தில்
O கையொப்பமிட்டு அந்த மை உலரு முன்னே,
O அவர் காலன் வழிப்பட்டதும்,
O மீண்டும் உலகம் பூராவும்
O இந்தியாவை நோக்கத் தொடங்கிவிட்டது.
O மிகவும் நெருக்கடியான நேரத்தில்,
O தமக்கே உரித்தான அரசியல் சாதுர்யத்தாலும்
O விவேகமான புத்திக் கூர்மையாலும்,
O நாட்டின் நெருக்கடியைத் தீர்த்த
O தீரர் திரு காமராஜர்!
O திருமதி இந்திரா காந்தி
O இன்று பாரதத்தின் பிரதமர்.
O இவ்வெற்றி, தலைவர் திரு காமராஜ்
O அவர்களுக்குக் கிட்டிய
O மற்றுமொரு மாபெரும் வெற்றியன்றோ!...
O அப்போது திரு காமராஜ்
O தமிழ் நாட்டின் அமைச்சர் தலைவராகப்
O பணிசெய்து வந்த பொன்னான தருணம்.
O பொது ஜனங்கள் அவரைப்
O பூரணமாகப் புரிந்துகொண்ட
O நம்பிக்கை மிகுந்த நல்ல வேளையுங்கூட.

# தென்னாட்டுக் காந்தி

# தென்னாட்டுக் காந்தி!

முதல் உலக யுத்தம் சூடு பிடித்தது, சூடி காட்டி நடந்து கொண்டிருந்த நேரம் அது!

பாரதத்தாய் அடிமைப்பட்டு, அல்லல்பட்டு, தொல்லைப் பட்டுக் கொண்டிருந்த வேளை அது!

உலக அரங்கத்தில் 'மண் ஆதிக்க வெறி' மூண்டது.

இந்திய நாட்டிலே 'சுதந்திர வெறி' மூண்டது.

பாரதத் திரு நாட்டின் தவப் புதல்வர்கள் சுதந்திர வேட்கை மிகக்கொண்டு, நாட்டுப் பற்றையே உயிர்ப்பாகக் கொண்டு, விடுதலை வேள்வித் தீயில் குதிக்க அணி வகுத்துப் புறப்பட்டுக் கொண்டிருந்தார்கள். இந்நிலையின் நிகழ்ச்சிகளை நாளிதழ்களில் படித்து அதன் விளைவாக, ஆவேச உணர்ச்சி கொண்டு இயங்கத் தலைப்பட்டது ஓர் உள்ளம்; அந்த உள்ளம், தமிழ்ப் பண்பில் பண் பட்ட உள்ளம். அக்கணமே, காங்கிரஸ் இயக்கத்தில் இயங்கும் வகையில் தன்னைக் காணிக்கை வைத்துக் கொண்டது: முழு நேரப்பணிக்குத் தன்னை ஆளாக்கிப் பெருமையும் நிறைவும் கண்டது!

தமிழ் நாட்டுக் காந்திஜி என்று ஏற்றிப் போற்றப் பட்டு வருகின்ற முதல் அமைச்சர் திரு காமராஜ் அவர்கள் நமது அறுபதாம் ஆண்டு ஆரம்ப விழாவை தாம் கொண் டாடுவதற்குப் பதிலாக, அன்னாரது விழாவினை தமிழ் கூறு நல்லுலகம் கொட்டு முழக்கோடு, கோலாகலப் பெரு மிதத்தோடு, ஒட்டி வந்துள்ள நன்றியுணர்ச்சிக் கலவை யோடு கொண்டாடியது.

தியாகத்தில் வாழ்ந்து, தியாகத்திஞல் உயர்ந்து, தியாகத்தையே உயிர்ப்பாகக் கொள்ளும் மனிதனே சிறப்புடையவன்; அவனைச் சரித்திரம் வாழ்த்தும்; வாழவைக்கும்.

இத்தகைய மாண்புடைத் தலைவர் ஒருவர் தமிழ் மண்ணுக்குக் கிட்டியிருப்பதில், நன்றியுள்ள தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் பெருமைப்பட வேண்டுமல்லவா! தனக்கென வாழாது, பிறந்த பொன் நாட்டுக்கென அனைத்தையும் 'சர்வபரித்தியாகம்' செய்த தியாக சீலரா யிற்றே நம் தலைமை அமைச்சர்!

" திரு காமராஜ் அவர்கள் கொள்கை வீரர். அவரது அடக்கமான தேசப்பணியும். அறிவாற்றல் மிக்க ஆட்சி முறையும், பொதுமக்கள் பால் அவர் கொண்டிருக்கக் கூடிய பாசம், அன்பு, இரக்கம் போன்ற குணச்சேகரமும் அவரை என்றென்றும் வாழ்த்தக் கடமைப்பட்டவை. அவர் தமிழகத்திற்கு மாத்திரம் சொந்தமானவரல்ல. இந்தியா பூராவுமே உரியவர்," என்று அன்று நேருஜி புகழ்ந்தார் இன்று திரு. சாவன் பாட்நாயக் போன்ற பாரதத் தலைவர்கள் புகழ்கிருர்கள்.

அரசியல் உலகம் மிகவும் விந்தையானது: வேடிக்கையானது.

இன்று ஒருவரை உயர்த்துவார்கள்; நாளை தாழ்த்துவார்கள்.

ஆனுல், கருத்து மாறுபாடு உடையவர்கள் ஒவ்வொருவரையும் அணுகி, காமராஜரைப்பற்றி அபிப்பிராயம் கேட்டால், "ஆஹா! அவர் பெருந் தியாகியல்லவா? அல்லும் பகலும் பாரதத்துக்காகவும், தமிழ்நாட்டுக்காகவும் தமிழ் மக்களுக்காகவும் அவரைப் போல கவலைப்படுபவர்கள் அவரைத் தவிர வேறு யார் இருக்கமுடியும்?" என்றுதான் சொல்வார்கள் அவ்வாறுதான் சொல்ல முடியும்!

திரு காமராஜ் உண்மைத் தியாகி!

"தன்னைத்தானே தூய்மைப் படுத்திக் கொள்பவனும், சுயமாகத் தியாகம் செய்யக் கூடியவனுமான இந்தியனே, தான் பிறந்த நாட்டுக்கு உற்ற துணையாக இருக்க முடியும்," என்ற காந்தியத் தத்துவத்திற்கே ஓர் உண்மைத் தத்துவமாக விளங்கி வருபவர் திரு காமராஜர்

ஒத்துழையாமை, நாகபுரிக் கொடிப்போர், சைமன் எதிர்ப்பு, உப்பு அறப்போர் போன்ற பலதரப்பட்ட கட்டங்கள் அவரைச் சிறைப்படுத்தின. சிறையே அவரது தாய்நாட்டுக் கோயில்!

தெய்வத் தமிழ்மறை கூறுகிறது:

"கொடைஅளி செங்கோல் குடிஓம்பல் நான்கும்
உடையான் ஆம் வேந்தர்க்கு ஒளி."

கொடைத்தன்மை, காருண்யம், நடுநிலை ஆட்சி முறை, குடிகளைப் பேணல் போன்ற குலநலன்களைக் கைக்கொண்டவன் மற்ற அரசர்களுக்கு ஒளிபோன்றவன் என்ற வள்ளுவத்திற்கு வாய்த்த பிரதிநிதியாக இன்று இந்த 'ஏழைப் பங்காளன் காமராஜர்' திகழ்ந்து வருகிறார். கண்ணற்ற சேய்களாகத் திகழ்ந்த ஏழைப் பிள்ளைகளுக்குக் கண் கொடுத்து, கல்வி கொடுத்து, உணவு, உடை கொடுத்துக் காத்து வருகின்ற மனித தெய்வம் அவர். 'நீதிநெறி விளக்கம்' புகலும் 'அனைவருக்கும் தெய்வமான இலைமுகப் பைபூண் இறை'யின் வடிவமாக விளங்குபவரும் இவரே! அரசியல் விழிப்புப் பெற்ற மக்களிடையே ஒன்றுபட்ட - உணர்ச்சி பூர்வமான ஐக்கியப் பான்மையைத் தழைக்கச் செய்து நாட்டையும் நாட்டுமக்களையும் குறித்தே சதா சிந்தித்துச் செயற்பட்டுவரும் கர்மவீரரை இன்று தமிழகப் பொதுமக்கள் பூர்ண மாகப் புரிந்து கொண்டுள்ளார்கள். இதுவே அன்னாரது வெற்றி; அவரது நாட்டுப் பணியின் வெற்றி!

சிந்தனை மேதை திரு கே. ஏ. அப்பாஸ், 'பிளிட்ஸ்' ஏட்டிலே, நம் முதலமைச்சரைப் புகழந்து," விடுதலைப் பெரும் இயக்கத்தின் பழம்பெருந் தலைவரான உங்களை தமிழகத்தின் மக்கள் மட்டுமின்றி, இந்திய மக்கள் எல்லோருமே மிகுந்த அன்புடன் போற்றுகிறார்கள்," என்று வாழத்துதல் உரைத்திருக்கிறார். இவ்வுரை, அடக்க சீலரான நம் தேசீயத் தலைவரது சமதர்மக் கொள்கைக்குக் கிட்டிய மற்றொரு வெற்றியன்றோ!

"நாடுதான் என் குடும்பம்; இக் குடும்பத்தைக் கட்டிக் காத்து, நல்லபடியாக வாழவைத்தே தீருவேன். நம்மை இனி யாரும் அடிமைகொள்ளமுடியாது. நமது சக்திகளை ஒன்றுதிரட்டி, நம் காலத்திலேயே ஏழ்மையை ஒழிப்போம். மற்ற தலைவர்கள் ஒத்துழைப்புடன் பிரிவினைப் பேயை விரட்டுவோம்; மக்கள் அனைவரையும் வாழ்விப்போம்!"

காந்திவழி மெய்த் தொண்டரின் இத்தகைய சீரிய நற் கருத்துக்களை நாம் என்றென்றும் நினைவிற்கொண்டு, அன்னாரது வாழ்வைப் பெருக்கி அருளவும், அதன் மூலம் நாட்டுப்பணி சிறக்க வழிகாட்டவும் எல்லாம் வல்ல இறைவன் அவரை வாழ்த்தி அருளுமாறு தொழுகின்றோம்!